بسم الله الرحمن الرحيم نحمده ونصلي على رسوله الكريم وعلى عبده المسيح الموعود

وَلَقَدْ نَصَرَكُمُ اللّٰهُ بِبَدْرٍ وَأَنْتُمْ أَذِلَّةٌ

# பதர்

வார இதழ் - காதியான்

Weekly **BADAR** Qadian TAMIL

தொகுதி 5

வருடாந்திர சந்தா ரூபாய் 500/-

இதழ் 41

ஆசிரியர் முஸ்ஸம்மில் அஹ்மது

20 ஸஃபர் 1442 ஹிஜ்ரி கமரி 08 அஹா 1399 ஹிஜ்ரி ஷம்ஸி

08 அக்டோபர் 2020


## அல்லாஹ்வின் கட்டளை

يَاَيُّهَا الَّذِيْنَ اٰمَنُوْا

خُذُوْا حِذْرَكُمْ

فَانْفِرُوْا ثُبَاتٍ

اَوِ انْفِرُوْا جَمِيْعًا○

நம்பிக்கை கொண்டவர்களே! நீங்கள் உங்கள் பாதுகாப்பிற்கான ஏற்பாட்டைச் செய்த பின்னரே உங்கள் வீடுகளிலிருந்து சிறிய அணிகளாகவோ, பெரிய அணிகளாகவோ வெளியேற வேண்டும். (4:72)

## அஹ்மதிய்யா செய்திகள்

ஸய்யிதுனா ஹஸ்ரத் அமீருல் முஃமினீன் ஐந்தாவது கலீஃபத்துல் மஸீஹ் அய்ய–தஹுல்லாஹுத்தஆலா பினஸ்ரிஹில் அஸீஸ் அவர்கள் அல்லாஹ்வின் அருளால் நலமுடன் இருந்து வருகின்றார்கள். அல்ஹம்துலில்லாஹ். ஜமாஅத் சகோதரர்கள் ஹுஸூர் அவர்களின் சிறந்த உடல் நலத்திற்காகவும், அவர்களின் நீண்ட ஆயுளுக்காகவும், அவர்களது உயர்வான நோக்கங்களில் வெற்றி கிடைப்பதற்காகவும், அவர்களது சிறப்பான பாதுகாப்பிற்காகவும், தொடர்ந்து துஆ செய்து வாருங்கள். அல்லாஹ் ஒவ்வொரு நொடியும் ஹுஸூர் அவர்களது பாதுகாவலனாகவும் உதவி–யாளனாகவும் இருப்பானாக. மேலும் அவர்களுக்கு உதவி செய்வானாக! ஆமீன்.

**நல்லொழுக்கத்தை நாகரிகமாக்குங்கள். மனித பழக்க வழக்கங்களை சீரமையுங்கள். கோபம் கூடாது. எளிமையும் தன்னடக்கமும் அந்த இடத்தைப் பிடிக்க வேண்டம். துஆவையும் மன்னிப்பையும் செயல்படுத்துங்கள். அல்லாஹ் தனது அருளோடும், கருணையோடும் உங்களோடு நடந்து கொள்வதற்காக தருமங்களை செய்து கொண்டிருங்கள்**

வாக்களிக்கப்பட்ட மஸீஹும் உறுதிமொழி வழங்கப்பட்ட மஹ்தியுமான ஹஸ்ரத் அக்தஸ் மிர்ஸா குலாம் அஹ்மது காதியானி [அலை] அவர்களின் கூற்றிலிருந்து...

என்னைப் பொறுத்தவரை அரசாங்கத்தின் சட்டத்திற்கு எதிராக நடப்பது கிளர்ச்சி செய்வதாகும். அது பயங்கரமான குற்றமாகும். ஆயினும் அரசாங்கம் நல்லொழுக்கமுள்ள, நகாரிகமான நாட்டின் பழக்க வழக்கங்களை, மார்க்க கட்டுப்பாடுகளை அறிந்திருக்கின்ற அதிகாரிகளை நியமிப்பது அதன் பொறுப்பாகும். சுருக்கமாக, நீங்கள் அந்த சட்டங்களின்படி செயல்படுங்கள். மேலும் உங்கள் அண்டை அயலாருக்கும் நண்பர்களுக்கும் அந்த சட்டங்களின் பயன்களைப் பற்றி எடுத்துக் கூறுங்கள். துஆவிற்கான இது தூண் என நான் மீண்டும் மீண்டும் கூறுகிறேன். அந்த தண்டனை (அதாவது பிளேக்) பஞ்சாபை நோக்கி வந்து கொண்டிருக்கிறது. எனவே ஒவ்வொருவரும் விழித்தெழுந்து துஆ செய்ய வேண்டியதும், பாவ மன்னிப்பு தேடுவதும் அவசியமாகும். தண்டனை தலைக்கு மேல் வந்து விட்டால் பிறகு பாவ மன்னிப்பு தண்டனையிலிருந்து விடுவிக்காது.

எனவே இறை தண்டனை வந்து பாவ மன்னிப்பின் வாசலை மூடுவதற்கு முன் பாவ மன்னிப்பு தேடுங்கள். உலக சட்டங்களைப் பற்றி இவ்வாறு பயம் இருக்கும்போது இறை சட்டத்தைப் பற்றி பயப்படாமல் இருப்பதற்கு என்ன காரணம்? வேதனை தலை மேல் வந்து விட்ட பிறகு தண்டனையை அனுபவித்தே ஆக வேண்டும். ஒவ்வொருவரும் தஹஜ்ஜுதில் எழுந்து தொழ முயற்சி செய்ய வேண்டும். மேலும் தனது ஐவேளை தொழுகையிலும் குனூத்தை சேர்த்துக் கொள்ளுங்கள். இறைவனை கோபப்படுத்தக்கூடிய எல்லாவற்றிலிருந்தும் பாவ மன்னிப்புத் தேடுங்கள்.

பாவம் என்பதன் கருத்து, இறைவனை கோபமூட்டக்கூடிய விஷயங்களிலிருந்து விட்டு விட்டு ஓர் உண்மையான மாற்றத்தை உருவாக்க வேண்டும் என்பதாகும். மேலும் காலை முன்னெடுத்து வைக்க வேண்டும். மேலும் இறையச்சத்தை மேற்கொள்ள வேண்டும். நல்லொழுக்கங்களை நாகரிகமாக்குங்கள். அதிலும் இறைவனின் கருணையாகும். மனித பழக்க வழக்கங்களை சீர்ப்படுத்துங்கள். கோபப்படாதீர்கள். அந்த இடத்தை எளிமையும், தன்னடக்கமும் இடம் பிடிக்க வேண்டும். நல்லொழுக்கத்தை சீர் செய்வதுடன் தனது தகுதிக்கேற்ப தருமம் செய்வதையும் மேற்கொள்ளுங்கள்.

يُطْعِمُوْنَ الطَّعَامَ عَلٰى حُبِّهٖ مِسْكِيْنًا وَّ يَتِيْمًا وَّ اَسِيْرًا

அதாவது இறை திருப்திக்காக வறியோர்களுக்கும், அனாதைகளுக்கும், கைதிகளுக்கும் உணவு கொடுக்கின்றனர். மேலும் அல்லாஹ்வின் திருப்திக்காக நாங்கள் வழங்குகிறோம் என்றும் மிகவும் பயங்கரமான நாளுக்கு நாங்கள் அஞ்சுகிறோம் எனவும் அவர்கள் கூறுகின்றனர்.

சுருக்கமாக, மிகவும் பயங்கரமான அந்த நாளுக்கு அஞ்சுங்கள். துஆவையும், பாவ மன்னிப்பையும் மேற்கொள்ளுங்கள். மேலும் அல்லாஹ் உங்களுடன் அருளோடும் கருணையோடும் நடந்து கொள்வதற்காக நீங்கள் தருமங்களையும் செய்து கொண்டிருங்கள்.

(மல்ஃபூஸாத் தொகுதி 1 பக்கம் 192 – 2018 ஆம் ஆண்டு காதியானில் அச்சிடப்பட்டது)

## எந்தச் செயல் அல்லாஹ்விற்கு மிகவும் பிரியமானது?

ஹஸ்ரத் அப்துல்லாஹ் பின் மஸ்வூது (ரலி) அவர்கள் கூறுகின்றார்கள்: நான் ஹஸ்ரத் நபிகள் நாயகம் (ஸல்) அவர்களிடம், எந்தச் செயல் அல்லாஹ்விற்கு மிகவும் பிரியமானது? என்று கேட்டேன். அதற்கு பெருமானார் (ஸல்) அவர்கள், குறித்த நேரத்தில் தொழுவது என்று கூறினார்கள். இதற்குப் பிறகு எந்தச் செயல் என்று கேட்டேன்.

அதற்கு அன்னார் (ஸல்) அவர்கள், தாய் தந்தையுடன் நல்ல முறையில் நடந்து கொள்வது என்று கூறினார்கள். பிறகு நான் இதற்குப் பிறகு எந்தச் செயல் என்று கேட்டேன். அதற்கு அன்னார் (ஸல்) அவர்கள், அல்லாஹ்வின் வழியில் ஜிஹாத் செய்வதாகும் என்று கூறினார்கள். அதாவது இறைவனது மார்க்கத்தைப் பரப்புவதற்கு முழுமையாக முயற்சி செய்வதாகும்.

(புகாரி, கிதாபுல் ஜிஹாது, பாப் பஸ்லுல் ஜிஹாது...)


பிரிண்டர் மற்றும் பப்ளிஷரான ஜமீல் அஹ்மது நாஸிர் அவர்கள் காதியானிலுள்ள ஃபஸ்லே உமர் அச்சகத்தில் அச்சிட்டு காதியானிலுள்ள பதர் பத்திரிகை அலுவலகம் மூலம் இதனை வெளியிட்டுள்ளார்.
Proprietor Nigran Badar Board Qadian

# ஜுமுஆ பேருரை

**ஹஸ்ரத் நபிகள் நாயகம் (ஸல்) அவர்கள் கூறினார்கள்: ஹஸ்ரத் தல்ஹா (ரலி) மற்றும் ஹஸ்ரத் சுபைர் (ரலி) ஆகியோர் சுவர்க்கத்தில் எனக்கு அருகில் இருப்பார்கள்**

**ஹஸ்ரத் சுபைர் (ரலி) அவர்கள் மார்க்கத்தின் தூண்களில் ஒரு தூண் ஆவார்கள் (ஹஸ்ரத் அலி (ரலி)**

**வஹீயை எழுதக்கூடிய, பத்ர் போரில் கலந்து கொண்ட ஹஸ்ரத் நபிகள் நாயகம் (ஸல்) அவர்களின் மகத்துவமிக்க சஹாபியான ஹஸ்ரத் சுபைர் பின் அல் அவாம் (ரலி) அவர்களைப் பற்றிய நற்குறிப்பு**

**குத்பாவின் இறுதியில் ஹுஸூர் அவர்கள், கேம்பியாவின் நாயிப் அமீர் மதிப்பிற்குரிய அல்ஹாஜ் இப்ராஹீம் முபாயீ சாஹிப், கராச்சியின் நாயிப் அமீர் மதிப்பிற்குரிய நயீம் அஹ்மது கான் சாஹிப், ஜெர்மனியைச் சேர்ந்த மதிப்பிற்குரிய நில அளவியர் வலி முஹம்மது சாயிப் மர்ஹூம் அவர்களின் மனைவியான மதிப்பிற்குரிய புஷ்ரா பேகம் சாஹிபா ஆகியோரது வஃபாத் தொடர்பான அறிவிப்பை செய்தவாறு அவர்களின் நற்குறிப்புகளை எடுத்துக் கூறினார்கள். மேலும் ஜுமுஆ தொழுகைக்குப் பிறகு ஜனாஸா காயித் தொழப்படும் என அறிவிப்புச் செய்தார்கள்**

செய்யிதுனா அமீருல் முஃமினீன் ஹஸ்ரத் மிர்ஸா மஸ்ரூர் அஹ்மது ஐந்தாவது கலீஃபத்துல் மஸீஹ் (அய்யதஹுல்லாஹுத்தஆலா பினஸ்ரிஹில் அஸீஸ்) அவர்கள் **இலண்டன் இஸ்லாமாபாதிலுள்ள முபாரக் பள்ளிவாசலில் 04 செப்டம்பர் 2020** அதாவது ஹிஜ்ரி ஷம்ஸி 1399 -ஆம் ஆண்டு **தபூக்** மாதம் **04 ஆம் தேதி** ஆற்றிய **ஜுமுஆ பேருரை**

اَشْهَدُ اَنْ لَّا اِلٰهَ اِلَّا اللّٰهُ وَحْدَهٗ لَا شَرِيْكَ لَهٗ وَاَشْهَدُ اَنَّ مُحَمَّدًا عَبْدُهٗ وَرَسُوْلُهٗ

اَمَّا بَعْدُ فَاَعُوْذُ بِاللّٰهِ مِنَ الشَّيْطٰنِ الرَّجِيْمِ

بِسْمِ اللّٰهِ الرَّحْمٰنِ الرَّحِيْمِ-

اَلْحَمْدُ لِلّٰهِ رَبِّ الْعٰلَمِيْنَ-الرَّحْمٰنِ الرَّحِيْمِ- مٰلِكِ يَوْمِ الدِّيْنِ-اِيَّاكَ نَعْبُدُ وَاِيَّاكَ نَسْتَعِيْنُ-

اِهْدِنَا الصِّرَاطَ الْمُسْتَقِيْمَ-صِرَاطَ الَّذِيْنَ اَنْعَمْتَ عَلَيْهِمْ ۙ

غَيْرِ الْمَغْضُوْبِ عَلَيْهِمْ وَلَا الضَّآلِّيْنَ

அல்லாஹ் திருக்குர்ஆனில் கூறுகின்றான்:

اَلَّذِيْنَ اسْتَجَابُوْا لِلّٰهِ وَالرَّسُوْلِ مِنْۢ بَعْدِ مَاۤ اَصَابَهُمُ

الْقَرْحُ ۛؕ لِلَّذِيْنَ اَحْسَنُوْا مِنْهُمْ وَاتَّقَوْا اَجْرٌ عَظِيْمٌ

எவர்கள் தாம் காயமுற்ற பிறகும் அல்லாஹ் மற்றும் அவனது தூதரின் கட்டளையை ஏற்றுக் கொள்வார்களோ அவர்களில் எவர்கள் தமது கடமையை நல்ல முறையில் நிறைவேற்றினார்களோ மேலும் இறையச்சத்தை மேற்கொண்டார்களோ அவர்களுக்கு பெரும் நற்கூலி உள்ளது. (3:173)

சஹாபாக்களைப் பற்றிய நற்குறிப்பு நடந்து கொண்டிருந்தது. ஹஸ்ரத் சுபைர் (ரலி) அவர்களைப் பற்றி எஞ்சியிருந்த சில நற்குறிப்புகளை எடுத்துரைப்பது எஞ்சியிருந்தது. அதனை இன்று நான் எடுத்துரைப்பேன்.

நான் தற்போது ஓதிய இந்த திருக்குர்ஆன் வசனம் தொடர்பாக ஹஸ்ரத் ஆயிஷா (ரலி) அவர்கள் உர்வா அவர்களிடம் கூறினார்கள்: எனது சகோதரனின் மகனே! ஹஸ்ரத் சுபைர் (ரலி) அவர்கள் மற்றும் ஹஸ்ரத் அபூபக்ர் (ரலி) ஆகியோர் இந்த வசனத்தில் குறிப்பிடப்பட்ட சஹாபாக்களில் அடங்குவர். இந்த வசனங்களில் அந்த சஹாபாக்களைப் பற்றி கூறப்பட்டுள்ளது.

உஹது போரில் ஹஸ்ரத் நபிகள் நாயகம் (ஸல்) அவர்கள் காயமுற்றபோதும், இணை வைப்பவர்கள் திரும்பிவிட்ட போதும் அவர்கள் மீண்டும் திரும்பி வந்து விடுவார்களோ என்ற அபாயத்தை ஹஸ்ரத் நபிகள் நாயகம் (ஸல்) அவர்கள் உணர்ந்தார்கள். எனவே ஹஸ்ரத் நபிகள் நாயகம் (ஸல்) அவர்கள் அவர்களை யார் யார் எல்லாம் பின்தொடர்ந்து செல்வார்கள் என்று கேட்டார்கள். அந்த கணத்தில் அவர்களில் 70 சஹாபாக்கள் ஆயத்தமாகி விட்டார்கள்.

அறிவிப்பாளர் கூறுகின்றார்கள்: ஹஸ்ரத் அபூபக்ர் மற்றும் ஹஸ்ரத் சுபைர் (ரலி) அவர்கள் இவர்களில் அடங்குவர். இது சஹீஹ் புகாரியின் அறிவிப்பாகும். ஹஸ்ரத் அபூபக்ர் (ரலி) மற்றும் ஹஸ்ரத் சுபைர் (ரலி) அவர்களும் காயமுற்றவர்களில் அடங்குவர்.

(சஹீஹுல் புகாரி, கிதாபுல் மகாஸி....... ஹதீஸ் எண் 4077)

சஹீஹ் முஸ்லிமில் இவ்வாறு அறிவிப்பு இடம் பெற்றுள்ளது. ஹுஷ்ஷாம் தனது தந்தையிடமிருந்து அறிவிக்கின்றார். அவர் கூறுகின்றார். ஹஸ்ரத் ஆயிஷா (ரலி) அவர்கள் என்னிடம் இவ்வாறு கூறினார்கள்: உமது மூதாதையர்கள் எப்படிப்பட்ட சஹாபாக்களைச் சார்ந்தவர்களாக இருந்தார்கள் என்றால் அவர்கள் தாங்கள் காயமுற்ற பிறகும் கூட அல்லாஹ் மற்றும் அவனது தூதரின் கட்டளைக்கு லெப்பைக் என்று கூறினர்.

(சஹீஹ் முஸ்லிம், கிதாபுல் ஃபஸாயிலுஸ் ஸஹாபா, பாப் மின் ஃபஸாயில் தல்ஹா வ சுபைர் ரலியல்லாஹு தஆலா அன்ஹுமா, ஹதீஸ் எண் 2418)

ஹஸ்ரத் அலி (ரலி) அவர்கள் கூறுகின்றார்கள்: நான் ஹஸ்ரத் நபிகள் நாயகம் (ஸல்) அவர்களை எனது காதுகளால் இவ்வாறு கூறக்கேட்டேன். தல்ஹா மற்றும் சுபைர் ஆகிய இருவரும் சுவர்க்கத்தில் எனது அண்டை அயலர்களாக இருப்பர்.

(சுனன் திர்மிதி, அப்வாபுல் மனாகிப், பாப் மனாகிப் அபீ முஹம்மது தல்ஹா... ஹதீஸ் எண் 3740)

ஹஸ்ரத் சயீத் பின் சுபைர் அவர்கள் அறிவிக்கின்றார்கள்: ஹஸ்ரத் அபூபக்ர் (ரலி), ஹஸ்ரத் உமர் (ரலி), ஹஸ்ரத் உஸ்மான் (ரலி), ஹஸ்ரத் அலி (ரலி), ஹஸ்ரத் சுபைர் (ரலி), ஹஸ்ரத் சஅத் (ரலி), ஹஸ்ரத் அப்துர் ரஹ்மான் (ரலி), ஹஸ்ரத் சயீத் பின் ஸைத் (ரலி) ஆகிய சஹாபாக்களின் அந்தஸ்து எப்படிப்பட்டதென்றால் போர்க் களத்தில் அவர்கள் ஹஸ்ரத் நபிகள் நாயகம் (ஸல்) அவர்களுக்கு முன் நின்று சண்டையிட்டு வந்தனர். தொழுகையில் அன்னாருக்கு பின் நின்று தொழுது வந்தனர்.

(அஸதுல் காபா ஃபீ மஃரூஃபத்துஸ் ஸஹாபா தொகுதி 2 பக்கம் 478 சயீத் பின் சுபைர், பைரூத்திலுள்ள தாருல் குதுபுல் இல்மிய்யாவில் அச்சிடப்பட்டது)

ஹஸ்ரத் அப்துர் ரஹ்மான் பின் அஹ்னஸ் அறிவிக்கின்றார்கள்: அன்னார் பள்ளிவாசலில் இருந்தபோது ஒரு நபர் ஹஸ்ரத் அலி (ரலி) அவர்களைப் பற்றி கூறினார். மேலும் அன்னாரின் கண்ணியத்திற்கு களங்கம் ஏற்படுத்தும் வகையில் பேசினார். அப்போது ஹஸ்ரத் சயீத் பின் ஸைது எழுந்து விட்டார்கள். மேலும் கூறினார்கள்: நான் ஹஸ்ரத் நபிகள் நாயகம் (ஸல்) அவர்கள் சாட்சியாக கூறுகின்றேன். இதனை

அன்னார் நிச்சயமாக கூறினார்கள். அதனை நான் கேட்டேன். அன்னார் கூறினார்கள்: பத்து நபர்கள் சுவர்க்கத்தில் நுழைவர். ஹஸ்ரத் நபிகள் நாயகம் (ஸல்) அவர்கள் சுவர்க்கத்தில் இருப்பார்கள். ஹஸ்ரத் அபூபக்ர் (ரலி) அவர்கள் சுவர்க்கத்தில் இருப்பார்கள். ஹஸ்ரத் உமர் (ரலி) அவர்கள் சுவர்க்கத்தில் இருப்பார்கள். ஹஸ்ரத் உஸ்மான் (ரலி) அவர்கள் சுவர்க்கத்தில் இருப்பார்கள். ஹஸ்ரத் அலி (ரலி) அவர்கள் சுவர்க்கத்தில் இருப்பார்கள். ஹஸ்ரத் தல்ஹா (ரலி), ஹஸ்ரத் சுபைர் பின் அவாம் (ரலி), ஹஸ்ரத் சஅத் பின் மாலிக் (ரலி), ஹஸ்ரத் அப்துர் ரஹ்மான் பின் அவ்ஃப் (ரலி) ஆகியோர் சுவர்க்கத்தில் இருப்பார்கள். நான் விரும்பினால் பத்தாவது நபரின் பெயரையும் குறிப்பிட முடியும். அப்போது பத்தாவது நபர் யார் என்று மக்கள் கேட்டனர். ஹஸ்ரத் சயீத் பின் ஸைத் சிறிது நேரம் மௌனமாக இருந்தார்.

அறிவிப்பாளர் கூறுகின்றார்: சில மக்கள் மீண்டும் பத்தாவது நபர் யார் என்று கேட்டனர். அப்போது அன்னார் கூறினார்கள்: சயீத் பின் ஸைது ஆவார். அதாவது தம்மைக் குறிப்பிட்டார்கள்.

(சுனன் அபீ தாவூது, கிதாபுஸ் சுன்னா... ஹதீஸ் எண் 4649)

இந்த அறிவிப்பு என்னைப் பொருத்தவரை ஹஸ்ரத் தல்ஹா (ரலி) அவர்களைப் பற்றி குறிப்பில் கூறப்பட்டு விட்டது.

ஹஸ்ரத் இரண்டாவது கலீஃபத்துல் மஸீஹ் (ரலி) அவர்கள் கூறுகின்றார்கள்: ஹஸ்ரத் நபிகள் நாயகம் (ஸல்) அவர்களுக்கு இறங்கி வந்த இறை அறிவிப்புகள் உடனுக்குடன் எழுதப்பட்டு வந்தன. எனவே ஹஸ்ரத் நபிகள் நாயகம் (ஸல்) அவர்கள் திருக்குர்ஆனை எந்த எழுத்தாளர்களைக் கொண்டு எழுதி வந்தார்களோ அவர்களில் கீழ்க்கண்ட 15 நபர்களின் பெயர் வரலாற்றிலிருந்து நிரூபணமாகின்றது.

ஸைது பின் சாபித், அபீ பின் கஅப், அப்துல்லாஹ் பின் சஅத் பின் அபீ சரஹ், சுபைர் பின் அவாம், காலித் பின் சயீத் பின் ஆஸ், ஹப்பான் பின் சயீதுல் ஆஸ், ஹன்லலா பின் ரபீவுல் அஸதி, முயக்கப் பின் அபீ ஃபாத்திமா, அப்துல்லாஹ் பின் அர்கமுஸ் சுஹரி, ஷர்ஹபில் பின் ஹஸனா, அப்துல்லாஹ் பின் ரவாஹா, ஹஸ்ரத் அபூபக்ர், ஹஸ்ரத் உமர், ஹஸ்ரத் உஸ்மான், ஹஸ்ரத் அலி.

ஹஸ்ரத் நபிகள் நாயகம் (ஸல்) அவர்களுக்கு திருக்குர்ஆன் இறங்கியபோது அன்னார் இந்த நபர்களில் யாரையாவது அழைத்து திருக்குர்ஆனின் வஹீயை எழுதிக் கொள்வார்கள்.

(தீபாச்சா தஃப்ஸீருல் குர்ஆன், அன்வாருல் உலூம் தொகுதி 20 பக்கம் 425,426)

ஹஸ்ரத் அனஸ் பின் மாலிக் அறிவிக்கின்றார்கள்: ஹஸ்ரத் நபிகள் நாயகம் (ஸல்) அவர்கள் ஒரு போரின்போது ஹஸ்ரத் சுபைர் பின் அவாம் அவர்களுக்கு ஏற்பட்ட அரிப்பு நோயின் காரணமாக பட்டுச் சட்டையை அணிய அனுமதி வழங்கி இருந்தார்கள்.

(சஹீஹுல் புகாரி, கிதாபுல் ஜிஹாது... ஹதீஸ் எண் 2919)

ஹஸ்ரத் நபிகள் நாயகம் (ஸல்) அவர்கள் மதீனாவில் குடியிருப்புகளுக்கான எல்லைகளை வரையறுத்தபோது ஹஸ்ரத் சுபைர் அவர்களுக்கு நிலத்தின் பெரும் பகுதியை நிர்ணயித்தார்கள். ஹஸ்ரத் நபிகள் நாயகம் (ஸல்) அவர்கள் ஹஸ்ரத் சுபைர் அவர்களுக்கு பேரீத்தம் பழ தோட்டம் ஒன்றையும் வழங்கினார்கள்.

(அத்தப்காத்துல் குப்ரா தொகுதி 3 பக்கம் 76 சுபைர் பின் அல் அவாம் – 1990 ஆம் ஆண்டு பைரூத்திலுள்ள தாருல் குதுபுல் இல்மிய்யாவில் அச்சிடப்பட்டது)

ஹஸ்ரத் இரண்டாவது கலீஃபத்துல் மஸீஹ் (ரலி) அவர்கள் ஹஸ்ரத் சுபைர் (ரலி) அவர்களுக்கு ஹஸ்ரத் நபிகள் நாயகம் (ஸல்) அவர்களால் அன்பளிப்பாக வழங்கப்பட்ட நிலத்தைப் பற்றி குறிப்பிட்டவாறு இவ்வாறு கூறுகின்றார்கள்:

ஹஸ்ரத் நபிகள் நாயகம் (ஸல்) அவர்கள் ஹஸ்ரத் சுபைர் (ரலி) அவர்களுக்கு அன்னாரின் குதிரை தனது இறுதி மூச்சு வரை ஓடும் அளவிற்கு அரசாங்க நிலத்தின் ஒரு பெரும் பகுதியை அன்பளிப்பாக வழங்கினார்கள். அதாவது குதிரை எந்த அளவிற்கு ஓட முடியுமோ அந்த அளவிற்கு வழங்கினார்கள். ஹஸ்ரத் சுபைர் (ரலி) அவர்களின் குதிரை எந்த இடத்தில் சென்று நின்றதோ அங்கிருந்து அன்னார் தனது சாட்டையை மிக அழுத்தத்துடன் மேலே வீசினார்கள். இவரின் குதிரை எங்கு சென்று நின்றதோ, அந்த அளவிற்கு மட்டும் அவருக்கு நிலம் வழங்கப்படக்கூடாது. மாறாக, அவரின் சாட்டை எங்கு விழுந்ததோ அதுவரை அவருக்கு நிலம் வழங்கப்பட வேண்டும் என்று கூறினார்கள்.

ஹஸ்ரத் முஸ்லிஹ் மவ்வூது (ரலி) அவர்கள் கூறுகிறார்கள்: நமது நாட்டு குதிரைகள் பல மைல் தொலைவிற்கு ஓட முடியும். ஆனால் அரபு குதிரைகள் மிக வேகமாக ஓடக் கூடியதாகும். நான்கு ஐந்து மைல் தொலைவு குதிரை ஓடியதாக வைத்துக் கொண்டாலும் கூட அவர்களுக்கு வழங்கப்பட்ட நிலத்தின் அளவு சுமார் இருபது ஆயிரம் ஏக்கர் பரப்பளவாகும்.

ஹஸ்ரத் நபிகள் நாயகம் (ஸல்) அவர்கள் ஹஸ்ரத் சுபைர் அவர்களைப் பற்றி இவ்வாறு கூறியதாக வருகின்றது. இமாம் அபூ யூசுஃப் கிதாப் அல் மஹ்ரஜில் எழுதுகின்றார்கள்: ஹஸ்ரத் நபிகள் நாயகம் (ஸல்) அவர்கள் ஹஸ்ரத் சுபைர் அவர்களுக்கு ஒரு நிலத்தின் பகுதியை வழங்கினார்கள். அதில் பேரீத்தம் பழ மரங்களும் இருந்தன.

ஹஸ்ரத் இரண்டாவது கலீஃபத்துல் மஸீஹ் (ரலி) அவர்கள் கூறுகின்றார்கள்: ஹஸ்ரத் நபிகள் நாயகம் (ஸல்) அவர்கள் வழங்கிய அந்த நிலத்தில் பேரீத்தம் பழ மரங்களும் இருந்தன. அது ஒரு காலத்தில் யூத கோத்திரமான பனூ நஸீரின் சொத்தாக இருந்தது. இது மதீனாவில் இருந்து சிரியாவை நோக்கி மூன்று மைல் தொலைவில் அமைந்துள்ள ஜரஃப் என்ற இடத்தில் பெயராகும். ஜரஃப் என்பது நிரந்தரமாக அமையப்பெற்ற கிராமத்தின் பெயராகும். நாம் முந்தைய ஹதீஸுடன் இந்த ஹதீஸை இணைத்துப் பார்த்தால் நமக்கு இந்த முடிவு கிடைக்கும். ஹஸ்ரத் நபிகள் நாயகம் (ஸல்) அவர்கள் ஹஸ்ரத் சுபைர் அவர்களுக்கு வழங்கிய அதாவது குதிரை ஓடும் குறிப்பு இடம் பெற்ற நிலம் வழங்கப்பட்ட ஹதீஸ் வந்துள்ளது. சுமார் 15 ஆயிரம் அல்லது 20 ஆயிரம் ஏக்கர் பரப்பளவாகும் அது. அப்போது அந்த இடத்தை அன்னார் வழங்கினார்கள். அந்நிலையில் அன்னார் ஏற்கனவே ஒரு கிராமத்திற்கு சொந்தக்காரராக இருந்தார்கள். அதில் பேரீத்தம் பழ தோட்டங்களும் இருந்தன.

(இஸ்லாம் அவ்ர் முல்கிய்யத்தே ஸமீன், அன்வாருல் உலூம் தொகுதி 21 பக்கம் 429 & மஜ்மவுல் பல்தான் தொகுதி 2 பக்கம் 149, பைரூத்திலுள்ள தாருல் குதுபுல் இல்மிய்யாவில் அச்சிடப்பட்டது)

உர்வா பின் சுபைர் அவர்கள் அறிவிக்கின்றார்கள். மர்வான் பின் ஹகம் கூறினார்கள்: தொற்று நோய் பரவிய ஆண்டில் ஹஸ்ரத் உஸ்மான் பின் அஃபான் அவர்களுக்கு கடுமையான தொற்று நோய் ஏற்பட்டது. எந்த அளவுக்கு என்றால் அதனால் அன்னாருக்கு ஹஜ் செய்ய முடியாமல் போனது. மேலும் அன்னார் வஸிய்யத்தும் செய்து விட்டார்கள். அப்போது குரைஷிகளில் ஒரு நபர் அன்னாரிடம் வந்தார். யாரையாவது நீங்கள் கலீஃபாவாக நியமித்து விடுங்கள் என்று கூறினார். அதாவது அந்த அளவுக்கு நிலைமை மோசமாகி இருந்தது. அப்போது மக்கள் இந்த விஷயத்தை கூறினார்களா? என்று அன்னார் கேட்டார்கள். அதற்கு அந்த நபர், ஆம் என்று கூறினார். ஹஸ்ரத் உஸ்மான் அவர்கள், யாரை அவர்கள் கலீஃபாவாக ஆக்க விரும்புகின்றார்கள் என்று கேட்டார்கள். அதற்கு அந்த நபர், மௌனமாக இருந்தார்.

இதற்கிடையில் மற்றொரு நபர் அன்னாரிடத்தில் வந்தார். அறிவிப்பாளர் கூறுகின்றார். அவர் ஹாரிஸ் ஆவார் என்று நான் கருதுகின்றேன். அவரும் கலீஃபாவை நியமித்து விடுங்கள் என்று கூறினார். அப்போது ஹஸ்ரத் உஸ்மான் (ரலி) அவர்கள், மக்கள் இவ்வாறு கூறினார்களா? என்று கேட்டார்கள். அதற்கு அவர், ஆம் என்று கூறினார். அதாவது தனக்கு பிறகு யார் கலீஃபாவாக ஆக வேண்டும் என்று ஹஸ்ரத் உஸ்மான் (ரலி) அவர்கள் கேட்டார்கள். அதற்கு அந்த நபர் மௌனமாக இருந்தார்.

ஹஸ்ரத் உஸ்மான் (ரலி) அவர்கள் ஹஸ்ரத் சுபைர் (ரலி) அவர்களை தேர்ந்தெடுக்க அவர்கள் விரும்புகின்றனரா என்று கேட்டார்கள். அதற்கு அவர், ஆம் என்று கூறினார். அப்போது எந்த இறைவனின் கரத்தில் எனது உயிர் உள்ளதோ அந்த இறைவன் மீது ஆணையாக! நான் அறிந்தவரை ஹஸ்ரத் சுபைர் (ரலி) அவர்கள் மக்களில் நிச்சயமாக மிகச் சிறந்தவர் ஆவார்கள். அதாவது ஹஸ்ரத் சுபைர் (ரலி) அவர்கள் ஹஸ்ரத் நபிகள் நாயகம் (ஸல்) அவர்களுக்கு மிகவும் அன்பிற்குரியவராக இருந்தார்கள்.

(சஹீஹுல் புகாரி, கிதாபுல் ஃபஸாயில் அஸ்ஹாபுன் நபி (ஸல்), பாப் மனாகிபுஸ் சுபைர் பின் அல் அவாம், ஹதீஸ் எண் 3717)

ஹஸ்ரத் சுபைர் (ரலி) அவர்கள் கூறி வந்தார்கள்: ஒரு முறை பத்ர் போரில் பங்கு பெற்ற சஹாபாக்களில் ஒருவரான அன்ஸாரி சஹாபி ஒருவருக்கு ஹஸ்ரத் நபிகள் நாயகம் (ஸல்) அவர்களின் முன்னிலையில் நீரூற்றிலிருந்து தண்ணீர் எடுப்பதில் சச்சரவு ஏற்பட்டது. அந்த இருவரும் அந்த ஊற்றிலிருந்தே தமது வயல்களுக்கு நீர் பாய்ச்சி வந்தனர். ஹஸ்ரத் நபிகள் நாயகம் (ஸல்) அவர்கள் அவ்விஷயத்தை முடிவுக்கு கொண்டு வருவதற்காக ஹஸ்ரத் சுபைர் அவர்களிடம், சுபைரே! நீர் உமது நிலத்திற்கு தண்ணீர் பாய்ச்சிய பிறகு உமது அண்டை அயலாருக்கும் தண்ணீர் கொடுப்பீராக என்று கூறினார்கள். அந்த அன்ஸாரி சஹாபிக்கு இந்த விஷயம் பிடிக்கவில்லை.

அவர் கூறினார்: அல்லாஹ்வின் தூதரே! இவர் உங்களது பெரியன்னையின் மகன் என்பதால் நீங்கள் இந்த தீர்ப்பை கூறுகின்றீர்களா? என்று கேட்டார். அப்போது ஹஸ்ரத் நபிகள் நாயகம் (ஸல்) அவர்களின் அருளுக்குரிய முகம் மாறியது. மேலும் ஹஸ்ரத் நபிகள் நாயகம் (ஸல்) அவர்கள் ஹஸ்ரத் சுபைர் (ரலி) அவர்களிடம், நீர் உமது நிலத்திற்கு நீர் பாய்ச்சிவிட்டு உமது பகுதியிலுள்ள நீர்த்தளங்கள் நிரம்பிவிடாதவரை தண்ணீரை நீரே தடுத்து நிறுத்தி வைத்துக் கொள்வீராக.

ஆக ஹஸ்ரத் நபிகள் நாயகம் (ஸல்) அவர்கள் ஹஸ்ரத் சுபைர் (ரலி) அவர்களுக்குரிய முழுமையான உரிமையை வழங்கி விட்டார்கள். ஆனால் முதலில் ஹஸ்ரத் நபிகள் நாயகம் (ஸல்) அவர்கள் அந்த அன்ஸாரி சஹாபியின் தேவையையும் முழுமை செய்யும் வகையில் ஆலோசனை வழங்கி இருந்தார்கள். ஆனால் அந்த அன்ஸாரி, ஹஸ்ரத் நபிகள் நாயகம் (ஸல்) அவர்களின் தீர்ப்பில் அதிருப்தியை வெளிப்படுத்தியபோது ஹஸ்ரத் நபிகள் நாயகம் (ஸல்) அவர்கள் சரியான கட்டளையுடன் ஹஸ்ரத் சுபைர் (ரலி) அவர்களுக்குரிய முழுமையான உரிமையை வழங்கி விட்டார்கள்.

ஹஸ்ரத் சுபைர் (ரலி) அவர்கள் கூறுகின்றார்கள்: இறைவன் மீது ஆணையாக! இந்த சம்பவம் தொடர்பாகவே கீழ்க்கண்ட வசனம் இறங்கியதாக நான் கருதுகிறேன்.

فَلَا وَرَبِّكَ لَا يُؤْمِنُوْنَ حَتّٰى يُحَكِّمُوْكَ فِيْمَا شَجَرَ بَيْنَهُمْ ثُمَّ لَا يَجِدُوْا فِيْٓ اَنْفُسِهِمْ حَرَجًا
مِّمَّا قَضَيْتَ وَيُسَلِّمُوْا تَسْلِيْمًا

அதாவது உமது இறைவன் மீது ஆணையாக! அவர்கள் தமக்கிடையிலான சண்டை சச்சரவுகளில் உம்மை நீதி நெறி தீர்ப்பவராக ஆக்கிக் கொள்ளாதவரை அவர்கள் ஒருபோதும் ஈமான் கொள்ள முடியாது. நீர் என்ன முடிவு எடுத்தாலும் அவர்கள் தமது உள்ளத்தில் அது பற்றி எந்த கஷ்டத்தையும் உணர மாட்டார்கள். மேலும் அவர்கள் முழுமையாக கட்டுப்படுதலை மேற்கொள்வார்கள். (4:66)

(முஸ்னத் அஹ்மத் பின் ஹம்பல் தொகுதி 1 பக்கம் 453, முஸ்னத் சுபைர் பின் அல் அவாம் ஹதீஸ் எண் 1419 – 1998 ஆம் ஆண்டு பைரூத்திலுள்ள தாருல் குதுபுல் இல்மிய்யாவில் அச்சிடப்பட்டது)

ஹஸ்ரத் சுபைர் (ரலி) அவர்கள் அறிவிக்கின்றார்கள்:

ثُمَّ اِنَّكُمْ يَوْمَ الْقِيٰمَةِ عِنْدَ رَبِّكُمْ تَخْتَصِمُوْنَ (39:32)

இந்த வசனம் இறங்கியபோது அதாவது நிச்சயமாக நீர் கியாமத் நாளன்று உங்களது இறைவனது முன்னிலையில் ஒருவர் மற்றொருவருடன் தர்க்கம் செய்வீர்கள். அப்போது அவர்கள் கேட்டார்கள். அல்லாஹ்வின் தூதர் அவர்களே! இதன் பொருள் நாங்கள் உலக சண்டைகள் செய்வோமா? என்று கேட்டார்கள். அதற்கு அன்னார், ஆம் என்று கூறினார்கள். பிறகு இந்த வசனம் இறங்கியது.

ثُمَّ لَتُسْـَٔلُنَّ يَوْمَئِذٍ عَنِ النَّعِيْمِ (102:09) – அதாவது அந்த நாளில் நீங்கள் உங்களுக்கு வழங்கப்பட்ட அருட்கொடையைப் பற்றி நிச்சயம் விசாரிக்கப்படுவீர்கள். அப்போது ஹஸ்ரத் சுபைர் அவர்கள் கேட்டார்கள். அல்லாஹ்வின் தூதர் அவர்களே! எங்களிடம் எந்த அருட்கொடையைப் பற்றி விசாரிக்கப்படும். எங்களிடமே வெறும் பேரீத்தம் பழங்களும், தண்ணீரும் மட்டுமே உள்ளன என்று கூறினார்கள். அதற்கு ஹஸ்ரத் நபிகள் நாயகம் (ஸல்) அவர்கள், இந்த அருட்கொடைகளைப் பெறுவதற்குரிய காலம் மிக விரைவில் வர உள்ளது என்று கூறினார்கள்.

(முஸ்னத் அஹ்மத் பின் ஹம்பல் தொகுதி 1 பக்கம் 449, முஸ்னத் சுபைர் பின் அல் அவாம் ஹதீஸ் எண் 1405 – 1998 ஆம் ஆண்டு பைரூத்திலுள்ள தாருல் குதுபுல் இல்மிய்யாவில் அச்சிடப்பட்டது)

இன்று இந்த ஏழ்மை உள்ளது. இன்ஷா அல்லாஹ் செல்வ செழிப்பிற்கான காலம் மிக விரைவில் வர உள்ளது.

ஹபஸ் பின் காலித் அவர்கள் கூறுகின்றார்கள்: மோஸல் என்ற ஊரைச் சார்ந்த பெரியவர் ஒருவர் எனக்கு இந்த ஹதீஸை கூறினார். மோஸல் என்ற நகரமானது சிரியாவின் மிகவும் பிரபல்யமான நகரமாகும். அது தனது மக்கள் தொகையாலும் தனது பரப்பளவாலும் அக்காலத்தில் இஸ்லாமிய நாடுகளில் ஒரு முக்கியமான நாடாக கருதப்பட்டது. எல்லா நகரங்களிலிருந்தும் மக்கள் அங்கு வந்தனர். அது மேவா என்ற ஊருக்கு அருகில் தஜலா என்ற ஊரின் எல்லைப் புறத்தில் அமைந்துள்ள பக்தாதிலிருந்து 222 மைல் தொலைவில் அமையப்பெற்ற ஊராகும். இது இந்த நகரத்தின் அறிமுகமாக எழுதப்பட்டுள்ளது. அவர் கூறுகின்றார்: மோஸல் என்ற ஊரிலிருந்து மக்கள் வந்து சென்றனர். அவர் கூறுகின்றார்: நான் ஹஸ்ரத் சுபைர் பின் அவாம் அவர்களுடன் சில பயணங்களை செய்துள்ளேன். ஒரு

**ஹஸ்ரத் வாக்களிக்கப்பட்ட மஸீஹ் (அலை) அவர்களின் கூற்றிலிருந்து...**

உங்களால் கண்ணால் மட்டும் எதையாவது பார்க்க முடியுமா என்ன? ஒருபோதும் முடியாது. இவ்வாறே நபித்துவத்தின் ஒளி இல்லாமல் எதையும் உங்களால் பார்க்க முடியாது. (ஹகீகத்துல் வஹி. ரூஹானி கஸாயின் தொகுதி 22, பக்கம் 117)

S.S.H.Muhammed Lebbai, Melapalayam

முறை நடைபெற்ற சம்பவமாகும். ஒரு வனாந்திரத்தில் அன்னாருக்கு குளிக்க வேண்டிய கட்டாயம் ஏற்பட்டது. எனவே தமக்கு திரையிடும்படி அன்னார் என்னிடம் கூறினார்கள். நான் அவர்களுக்காக துணியைக் கட்டி திரையிட்டேன். அன்னாரும் குளிக்கத் தொடங்கினார்கள். திடீரென எனது பார்வை அன்னாரின் உடலின் மீது பட்டது. அன்னாரின் தலையும் அன்னாரின் முழு உடலும் வாள்களினால் ஏற்பட்ட காயங்களும் தழும்புகளால் நிரம்பி இருந்ததை பார்த்தேன்.

நான் அவர்களிடம் கூறினேன்: இறைவன் மீது ஆணையாக! நான் உங்களது உடலில் காயங்களின் தழும்புகளை பார்த்தேன். இதற்கு முன் வேறு எவரது உடலிலும் இதுபோன்ற காயங்களை நான் ஒருபோதும் கண்டதில்லை என்று கூறினேன்.

அதற்கு அன்னார் எனக்கு பதிலாக கூறினார்கள்: நீங்கள் எனது உடலிலுள்ள காயங்களின் தழும்புகளை பார்த்து விட்டீர்களா? என்று கேட்டவாறு, இறைவன் மீது ஆணையாக! இந்த தழும்புகள் அனைத்தும் இறைவனது வழியில் ஹஸ்ரத் நபிகள் நாயகம் (ஸல்) அவர்களுடன் இணைந்து போர் புரிந்தபோது ஏற்பட்ட காயங்களாகும் என்று கூறினார்கள்.

(முஸ்தத்ரிக் அலஸ் ஸஹ்யைன் லில்ஹாகிம் தொகுதி 3 பக்கம் 406, கிதாப் மஃரூஃபத்துஸ் ஸஹாபா, ஹதீஸ் எண் 5550 – 2002 ஆம் ஆண்டு பைரூத்திலுள்ள தாருல் குதுபுல் இல்மிய்யாவில் அச்சிடப்பட்டது)

ஹஸ்ரத் உஸ்மான், ஹஸ்ரத் மிக்தாத், ஹஸ்ரத் அப்துல்லாஹ் பின் மஸ்ஊது, ஹஸ்ரத் அப்துர் ரஹ்மான் பின் அவ்ஃப் ஆகியோர் வஸிய்யத் செய்து வைத்திருந்தனர். அவர்கள் மக்களின் செல்வங்களை பாதுகாத்து வந்தார்கள். மேலும் தனது செல்வத்திலிருந்து அவர்களின் பிள்ளைகளுக்கு செலவிட்டு வந்தார்கள். செல்வ செழிப்பு இருந்தது. எனவே அவர்களின் செல்வங்களிலிருந்து அவர்களின் பிள்ளைகளுக்கு செலவிடாமல் தமது செல்வத்திலிருந்தே மக்களுக்கு செலவிட்டு வந்தார்கள். இதன் மூலம் அவர்களின் செல்வம் பிற்காலத்தில் அவர்களுக்கு பயனளிக்கும் என்று அவர்கள் எண்ணினார்கள். அவர்களிடம் எந்த பேராசையும் இருந்ததில்லை.

ஹஸ்ரத் சுபைர் (ரலி) அவர்களிடம் ஓராயிரம் தீனார் இருந்தது. அது தொடர்பாக இவ்வாறு வருகின்றது. அன்னாருக்கு ஓராயிரம் அடிமைகள் இருந்தனர். அவர்கள் விலை நிலத்திலிருந்து விளைச்சல் செய்வதற்காக பணியாற்றி வந்தனர். அன்னார் அதிலிருந்து எதனையும் வீட்டிற்கு கொண்டு வர மாட்டார்கள். முழுவதையும் சதகா கொடுத்து விடுவார்கள்.

மதீஹ் பின் அஸ்வத் அறிவிக்கின்றார்: நான் ஹஸ்ரத் உமர் (ரலி) அவர்களை இவ்வாறு கூறக் கேட்டுள்ளேன். அன்னார் இவ்வாறு கூறினார்கள்: ஹஸ்ரத் சுபைர் (ரலி) அவர்கள் மார்க்கத்தின் பத்து தூண்களில் ஒரு தூண் ஆவார்கள்.

(அல் அஸாபா ஃபீ தமீஸில் ஸஹாபா தொகுதி 2 பக்கம் 460 சுபைர் பின் அல் அவாம் – 1995 ஆம் ஆண்டு பைரூத்திலுள்ள தாருல் குதுபுல் இல்மிய்யாவில் அச்சிடப்பட்டது)

ஹஸ்ரத் அப்துல்லாஹ் பின் சுபைர் அவர்களிடமிருந்து அறிவிப்பு வருகின்றது. ஹஸ்ரத் சுபைர் (ரலி) அவர்கள் ஒட்டகப் போரின் நாளன்று போருக்காக செல்வதற்காக என்னை அழைத்தார்கள். நானும் அவர்களுக்கு அருகில் சென்று நின்று கொண்டேன். அப்போது அன்னார் கூறினார்கள். எனது அன்பிற்குரிய மகனே! இன்று நீர் அநீதியாளரை கொலை செய்வீர். அல்லது அநீதியிழைக்கப்பட்டவரை கொலை செய்வாய். இன்று நான் அநீதியிழைக்கப்பட்டவராக கொலை செய்யப்பட்டு விடுவேன் என்றே தோன்றுகிறது. எனது கடனையப் பற்றியும் எனக்கு மிக அதிகமான கவலை உள்ளது. நமது செல்வத்திலிருந்து கடன் தொகையை செலுத்துவதற்கான பணம் எஞ்சிவிடும் என்று நீர் எண்ணுகின்றீரா? என்று கேட்டார்கள்.

பின்னர் கூறினார்கள்: எனது மகனே! சொத்தை விற்று கடனை செலுத்து விடுவீராக. நான் மூன்றில் ஒரு பங்கை வஸிய்யத் செய்து விடுகின்றேன். மேலும் நான் வஸிய்யத் செய்கின்றேன். கடனை செலுத்திய பிறகு ஏதாவது எஞ்சியிருந்தால் அதில் மூன்றில் ஒரு பங்கு உமது பிள்ளைக்குரியதாகும். அன்னார் தமது பிள்ளைகளுக்கு கொடுத்தார்கள். அதன் பிறகு எஞ்சியவற்றிலிருந்து மற்றவர்களுக்கும் கொடுத்தார்கள்.

ஹுஷ்ஷாம் கூறினார்கள்: அப்துல்லாஹ் பின் சுபைர் அவர்களின் மகன் ஹஸ்ரத் சுபைர் அவர்களின் மகன்களான ஹஸ்ரத் குபைப் மற்றும் குப்பாப் ஆகியோர் வயதில் ஒத்தவர்களாக இருந்தனர். அதாவது அப்துல்லாஹ் அவர்களின் மகனும் ஹஸ்ரத் சுபைர் அவர்களின் பிள்ளைகளும் சம வயதை உடையவர்களாக இருந்தனர். மகனின் பிள்ளைகளும் தனது சகோதரர்களுக்கு சமமானவர்களாக இருந்தனர். அக்காலத்தில் ஹஸ்ரத் அப்துல்லாஹ் பின் சுபைர் அவர்களுக்கு ஒன்பது பிள்ளைகள் இருந்தனர். மகன்களின் பிள்ளைகளும் கூட அவர்களின் சகோதரர்களுக்கு இணையாக இருந்தனர்.

ஹஸ்ரத் அப்துல்லாஹ் பின் சுபைர் அவர்கள் அறிவிக்கின்றார்கள்: என்னிடம் ஹஸ்ரத் சுபைர் அவர்கள் தனது கடனை செலுத்துவது தொடர்பாக வஸிய்யத் செய்தபோது இவ்வாறு கூறினார்கள். எனது மகனே! ஒருவேளை உம்மால் கடன் தொகையில் சிறிதளவை செலுத்த முடியாமல் போய்விட்டால் நீர் எனது எஜமானரிடம் உதவி தேட வேண்டும்.

அப்துல்லாஹ் பின் சுபைர் அவர்கள் கூறுகின்றார்கள்: இங்கு எஜமானர் என்பதன் பொருள் என்ன என்பதை புரியவில்லை. எனவே உங்களின் எஜமானர் யார் என்று கேட்டேன். அதற்கு ஹஸ்ரத் சுபைர் அவர்கள், அல்லாஹ் என்று கூறினார்கள்.

அதன் பிறகு நான் எப்போதெல்லாம் அன்னாரின் கடன் தொடர்பான வஸிய்யத்தில் சிக்கலை எதிர்கொண்டேனோ அப்போது சுபைரின் இறைவனே, நீ அவரது கடனை செலுத்து விடுவாயாக என்று கூறி வந்தேன். இறைவனும் அதை வழங்கி விடுவான். அதாவது அல்லாஹ் அதன் பிறகு ஏதாவதொரு ஏற்பாட்டை செய்து விடுவான். அந்த கடனை செலுத்துவதற்குரிய ஏற்பாட்டை இறைவன் செய்து வந்தான். சொத்துக்களும் இருந்தன. அதிலிருந்தே கடனும் அடைக்கப்பட்டு வந்தது.

ஹஸ்ரத் சுபைர் (ரலி) அவர்கள் எந்த நிலையில் ஷஹீதானார்கள் என்றால் அன்னார் எந்த தீனாரையும் விட்டுவிட்டு செல்லவில்லை. எந்த திர்ஹமையும் விட்டுவிட்டு செல்லவில்லை. மாறாக, சில

## ஹஸ்ரத் வாக்களிக்கப்பட்ட மஸீஹ் (அலை) அவர்களின் கூற்றிலிருந்து...

எவர்களின் இருப்பானது இறைவனின் தொன்றுதொட்டு இருந்து வருகின்ற, மாறாத சட்டத்தின் அடிப்படையில் இறைவனை அடையாளங்கண்டு கொள்வதற்கான வழியாக நிர்ணயிக்கப்பட்டிருக்கின்றதோ அவற்றின் மீது ஈமான் கொள்வது ஏகத்துவத்தின் ஒரு பகுதியாகும். (ஹகீகத்துல் வஹி. ரூஹானி கஸாயின் தொகுதி 22, பக்கம் 114)

A.Nasir Ahmad (மேலப்பாளையம்)

நிலங்களை விட்டுவிட்டு சென்றார்கள். அதில் காபா என்ற இடமும் அடங்கும். மதீனாவில் 11 வீடுகள் இருந்தன. பஸ்ராவில் 2 வீடுகள் இருந்தன. கூஃபாவில் ஒரு வீடும், எகிப்தில் ஒரு வீடும் இருந்தது. ஹஸ்ரத் சுபைர் (ரலி) அவர்கள் எவ்வாறு கடனாளி ஆனார்கள் என்றால் மக்கள் அன்னாரிடம் தமது செல்வத்தை அமானிதமான ஒப்படைத்து வருவார்கள். ஆனால் ஹஸ்ரத் சுபைர் அவர்களோ இது அமானிதம் அல்ல. இது கடனாகும் என்றும் கூறுவார்கள். ஏனென்றால் தமக்கு அது வீணாகி விடும் என்ற அச்சம் இருப்பதாக கூறி வந்தார்கள். நான் இதனை அமானிதமாக வைக்க மாட்டேன். மாறாக, இதனை நான் உங்களிடமிருந்து கடன் தொகையாக பெற்றுக் கொள்கின்றேன் என்று கூறுவார்கள்.

பின்னர் அதனை செலவிட்டும் வந்தார்கள். எனவே நான் இதனை கடன் என்ற நிலையில் உங்களிடமிருந்து பெறுகின்றேன். அதனை நான் உங்களுக்கு திருப்பி செலுத்தி விடுவேன் என்று கூறியே அதனை பெற்று வந்தார்கள்.

எவ்வாறிருப்பினும் ஹஸ்ரத் சுபைர் அவர்கள் செல்வங்களை வசூல் செய்திருந்தபோதிலும் அமீர் ஆகிவிடவில்லை. ஹஸ்ரத் நபிகள் நாயகம் (ஸல்) அவர்கள், ஹஸ்ரத் அபூபக்ர் (ரலி), ஹஸ்ரத் உமர் (ரலி), ஹஸ்ரத் உஸ்மான் (ரலி) ஆகியோருடன் இணைந்து ஹிஜாதில் பங்கு பெற்றிருந்தார்கள். அன்னார் ஹிஜாதில் நிச்சயம் பங்கு பெற்று வந்தார்கள். ஆனால் ஏராளமான செல்வந்தர்கள் செல்வங்களை ஒன்றுகூட்டி இருந்தபோதிலும் பங்கு பெறவில்லை.

ஹஸ்ரத் அப்துல்லாஹ் பின் சுபைர் அவர்கள் கூறுகின்றார்கள்: நான் அன்னாரின் கடனை கணக்கிட்டபோது அது 22 லட்சமாக இருந்தது.

ஹஸ்ரத் ஹகீம் பின் ஹஸாம் அவர்கள் ஹஸ்ரத் அப்துல்லாஹ் பின் சுபைர் அவர்களை சந்தித்தார்கள். அவர்கள் கூறினார்கள்: எனது அண்ணன் மகனே! எனது அண்ணன் மீது எவ்வளவு கடன் உள்ளது என்று கேட்டார்கள். ஹஸ்ரத் அப்துல்லாஹ் பின் சுபைர் அவர்கள் அதை மறைத்தார்கள். மேலும் ஒரு லட்சம் என்று கூறினார்கள். ஹஸ்ரத் ஹகீம் பின் ஹஸாம் அவர்கள், அல்லாஹ்வின் மீது ஆணையாக! நான் அதற்கு போதுமானதாக உமது செல்வத்தை கருதவில்லை என்று கூறினார்கள். வெளிப்படையில் இருந்த செல்வம் குறைவானதாக இருந்தது.

ஹஸ்ரத் அப்துல்லாஹ் பின் சுபைர் அவர்கள் அன்னாரிடம் கூறினார்கள்: அன்னாரின் கடன் 22 லட்சம் என்றால் அது பற்றி நீங்கள் என்ன கூறுவீர்கள் என்று கேட்டார்கள். அதற்கு அன்னார், நீர் அதை செலுத்துவதற்கு தகுதியானவராக உம்மை கருதவில்லை என்று கூறினார்கள். மேலும் உம்மால் செலுத்த முடியாமல் போனால் என்னிடம் உதவி கேளும். நான் அதனை செலுத்தி விடுகின்றேன். நான் தயாராக இருக்கின்றேன். கடனை கொடுத்து விடுகின்றேன் என்று கூறினார்கள். ஹஸ்ரத் சுபைர் அவர்கள் காபா என்ற இடத்தை ஒரு லட்சத்தி எழுபது ஆயிரத்திற்கு வாங்கினார்கள். ஹஸ்ரத் அப்துல்லாஹ் பின் சுபைர் அவர்கள் 16 லட்சத்தில் அதனை விற்றார்கள். பின்னர் கூறினார்கள்: உங்களில் எவருக்கு சுபைர் கடன் கொடுக்க வேண்டுமோ அவர்கள் காபா என்ற இடத்தை வந்தடையவும் என்று எழுந்து நின்று அறிவித்தார்கள். காபா என்ற இடத்தை விற்றபோது அவருக்கு 16 லட்சம் கிடைத்தது. மேலும் அறிவிப்பு செய்தார்கள். எவர்களுக்கு கடன் கொடுக்க வேண்டுமோ, அவர்கள் தமது கடனைப் பெற்றுக் கொள்ளுங்கள் என்று கூறினார்கள்.

ஹஸ்ரத் அப்துல்லாஹ் பின் ஜாஃபர் அவர்களுக்கு ஹஸ்ரத் சுபைர் அவர்கள் 4 லட்சம் கொடுக்க வேண்டியதிருந்தது. அன்னார் அப்துல்லாஹ் பின் சுபைர் அவர்களிடம், நீர் விரும்பினால் நான் அந்த தொகையை மன்னித்து விடுகின்றேன். அல்லது நீங்கள் விரும்பினால் பிற்படுத்தி செலுத்தும் கடன் தொகையில் அதனை இணைத்துக் கொள்ளுங்கள் என்று கூறினார்கள். ஹஸ்ரத் அப்துல்லாஹ் பின் சுபைர் அவர்கள் கூறினார்கள்: இல்லை. வேண்டாம். அப்போது எனக்கு நிலத்தின் ஒரு பகுதியை தந்து விடுங்கள் என்று கூறினார்கள். உங்களுக்கு இங்கிருந்து இங்கு வரை உள்ளது என்று கூறினார்கள். அப்போது கடன் தொகைக்கு சமமான அளவில் அந்த இடத்தை அன்னாருக்கு விற்று விற்றார்கள். அதாவது அப்துல்லாஹ் பின் ஜாஃபர் அவர்களுக்கு கொடுத்து விட்டார்கள். அந்த கடன் தொகையில் நாலரை பங்கு எஞ்சியிருந்தது.

ஹஸ்ரத் அப்துல்லாஹ் பின் சுபைர் ஹஸ்ரத் முஆவிய்யா அவர்களிடம் வந்தார்கள். அங்கு அம்ர் பின் உஸ்மான், முன்ஸிர் பின் சுபைர் மற்றும் இப்னு அஸ்மா ஆகியோர் இருந்தனர். ஹஸ்ரத் முஆவிய்யா அவர்கள் காபா என்ற இடம் எவ்வளவு விலைக்கு போனது என்று கேட்டார்கள். ஹஸ்ரத் இப்னு சுபைர் அவர்கள் ஒவ்வொரு பகுதியும் ஒரு லட்சம் என்று கூறினார்கள். ஹஸ்ரத் முஆவிய்யா அவர்கள், எவ்வளவு எஞ்சியுள்ளது என்று கேட்டார்கள். அதற்கு அவர்கள், நாலரை பங்கு எஞ்சியுள்ளது என்றார்கள்.

முன்ஸிர் பின் சுபைர் கூறுகின்றார்கள்: நான் ஒரு பகுதியை ஒரு லட்சத்திற்கு வாங்கிக் கொண்டேன். அம்ர் பின் உஸ்மான் கூறினார்கள். நான் ஒரு பகுதியை ஒரு லட்சத்திற்கு வாங்கினேன். இப்னு சும்ஆ கூறுகின்றார்: ஒரு பகுதியை நானும் ஒரு லட்சத்திற்கு வாங்கிக் கொண்டேன். ஹஸ்ரத் முஆவிய்யா அவர்கள் கூறினார்கள்: இப்போது எவ்வளவு எஞ்சியுள்ளது என்று கேட்டதற்கு, ஒன்றரை பங்கு எஞ்சியிருப்பதாக அப்துல்லாஹ் பின் சுபைர் அவர்கள் கூறினார்கள். அதற்கு அந்த ஒன்றரை பங்கை நான் வாங்கிக் கொள்கின்றேன் என்று அன்னார் கூறினார்கள். அதாவது எஞ்சியிருந்த அந்த நிலத்தை முஆவிய்யா அவர்கள் வாங்கிக் கொண்டார்கள்.

அப்துல்லாஹ் பின் ஜஃபர் அவர்கள் தனது பங்கை ஹஸ்ரத் முஆவிய்யா அவர்களின் கரத்தில் 6 லட்சத்திற்கு விற்று விட்டார்கள். எவ்வாறிருப்பினும் அன்னார் இறைவன் கடனை அடைப்பான் என்று கூறியதற்கேற்ப அல்லாஹ்வே அதற்கான ஏற்பாட்டைச் செய்தான். சில சொத்துக்களை விற்று கடனை அடைக்கப்பட்டது.

ஹஸ்ரத் அப்துல்லாஹ் பின் சுபைர் அவர்கள் ஹஸ்ரத் சுபைர் அவர்களின் கடனை செலுத்திய பிறகு ஹஸ்ரத் சுபைர் அவர்களின் பிள்ளைகள், எங்களுக்கு எங்களின் சொத்துக்களை பங்கிட்டு கொடுங்கள் என்று கூறினார்கள். கடன் அனைத்தும் இப்போது அடைக்கப்பட்டு விட்டது. எஞ்சியுள்ள சொத்துக்களை வாரிசுதாரர்களுக்கு பங்கிட்டு கொடுத்து விடுங்கள் என்று கூறினார்கள். ஹஸ்ரத் அப்துல்லாஹ் பின் சுபைர் அவர்கள் கூறினார்கள்: முடியாது. அல்லாஹ்வின் மீது ஆணையாக! நான்கு ஆண்டுகள் ஹஜ்ஜின்போது அறிவிப்பு செய்யாதவரை சொத்தை பங்கிட முடியாது. அதாவது நான்கு ஆண்டுகள் முதலில் இவ்வாறு

**ஹஸ்ரத் வாக்களிக்கப்பட்ட மஸீஹ் (அலை) அவர்களின் கூற்றிலிருந்து...**

நபிமார்கள் காட்டுகின்ற, இறைஞானம் வரை கொண்டு செல்கின்ற அந்த வானத்தின் அடையாளங்களும் வல்லமைகளும் வெளிப்படுத்துகின்ற வியக்கத்தக்க விஷயங்களும் இல்லாமல் எப்போதும் முழுமையான உறுதித்தன்மை மூலம் உருவாகின்ற அந்த கலப்பற்ற ஏகத்துவம் கிடைக்காது. (ஹகீகத்துல் வஹி. ரூஹானி கஸாயின் தொகுதி 22, பக்கம் 117)

M.Sabahul Islam & Mohaideen Ali, Melapalayam

அறிவிப்பு செய்வேன். ஒவ்வொரு ஹஜ்ஜின் நாளின்போதும் எவருக்கு ஹஸ்ரத் சுபைர் அவர்கள் கடன் தொகையை திருப்பி செலுத்த வேண்டுமோ அவர் எம்மிடம் வரட்டும். நாம் அதனை செலுத்தி விடுவோம் என்று அறிவிப்பு செய்திருந்தார்கள். நான்கு ஆண்டுகள் வரை ஹஜ்ஜின் சந்தர்ப்பத்தின்போது இவ்வாறு அறிவிப்பு செய்து கழிந்த பிறகு அன்னார் எஞ்சிய சொத்துக்களை ஹஸ்ரத் சுபைர் அவர்களின் பிள்ளைகளுக்கு பங்கிட்டு கொடுத்து விட்டார்கள்.

ஹஸ்ரத் சுபைர் அவர்களுக்கு நான்கு மனைவிகள் இருந்தனர். மனைவிகளுக்குரிய எட்டில் ஒரு பங்கை நான்கு மனைவிகளுக்கும் பங்கிட்டுக் கொடுத்தார்கள். ஒவ்வொரு மனைவிக்கும் 11 லட்சம் கிடைத்தது. அதன் பிறகும் பாக்கி இருந்த சொத்து பங்கிடப்பட்டபோது 11,11 லட்சம் மனைவிமார்களுக்கு கிடைத்து விட்டது. அன்னாரின் முழு சொத்தும் 3 கோடியே 52 லட்சமாக இருந்தது.

ஓர் அறிவிப்பில் இவ்வாறு வருகின்றது. சுஃப்யான் பின் அுயீனா அறிவிக்கின்றார்கள்: ஹஸ்ரத் சுபைர் அவர்கள் விட்டுச் சென்ற சொத்து நான்கு கோடி பங்கிடப்பட்டது.

ஹஷ்ஷாம் பின் உர்வா தமது தந்தையிடமிருந்து அறிவிக்கின்றார்கள்: ஹஸ்ரத் சுபைர் அவர்கள் விட்டுச் சென்ற சொத்தின் மதிப்பு 5 கோடியே 20 லட்சம் ஆகும். அல்லது 5 கோடியே 10 லட்சமாக இருந்தது.

இதேபோன்று உர்வா அறிவிக்கின்றார்கள்: ஹஸ்ரத் சுபைர் அவர்களுக்கு எகித்தில் சில நிலங்கள் இருந்தன. மேலும் இஸ்கந்தரியாவிலும் சில இடங்கள் இருந்தன. கூஃபாவிலும் கொஞ்சம் நிலம் இருந்தது. பஸ்ராவில் வீடுகள் இருந்தன. மதீனாவிலுள்ள சொத்துக்களிலிருந்து வருமானம் இருந்தது. அது அன்னாருக்கே வந்தது.

(அத்தப்காத்துல் குப்ரா லாபின் சஅத் தொகுதி 3 பக்கம் 80,81 சுபைர் பின் அல் அவாம் – 1990 ஆம் ஆண்டு பைரூத்திலுள்ள தாருல் குதுபுல் இல்மிய்யாவில் அச்சிடப்பட்டது)

எவ்வாறிருப்பினும் இந்த அனைத்து சொத்துக்களிலிருந்தும் கடனை அடைத்து விட்டு அதில் எஞ்சியிருந்த சொத்துக்களை வாரிசுதாரர்களுக்கு பங்கிட்டு கொடுக்கப்பட்டது.

மத்ரஃப் கூறுகின்றார்கள்: ஒரு முறை நான் ஹஸ்ரத் சுபைர் அவர்களிடம் கூறினோம். அபூ அப்தில்லாஹ்வே! நீங்கள் என்ன நோக்கத்திற்காக வந்துள்ளீர்கள்? நீங்கள் ஒரு கலீஃபாவை வீணாக்கி விட்டீர்கள். எந்த அளவுக்கு என்றால் அவர் ஷஹீதாகி விட்டார். இப்போது நீங்கள் அதற்கு பழிவாங்க வேண்டும் என்று கூறுகின்றீர்கள். ஹஸ்ரத் சுபைர் அவர்கள் அதற்கு கூறினார்கள்: நாங்கள் ஹஸ்ரத் நபிகள் நாயகம் (ஸல்) அவர்களின் காலத்தில், ஹஸ்ரத் அபூபக்ர் (ரலி), ஹஸ்ரத் உமர் (ரலி), ஹஸ்ரத் உஸ்மான் (ரலி) ஆகியோரின் காலத்தில் இந்த வசனத்தை ஓதி வந்தோம். நீங்கள் அந்த குழப்பத்திற்கு அஞ்சுங்கள். அது உங்களில் அநீதியாளர்களை மட்டும் வந்தடையாது. மாறாக, அது பொதுவானதாக இருக்கும். அப்போது நாங்கள் அது எங்களுக்கு பொருந்தும் என்று கருதவில்லை. எந்த அளவுக்கு என்றால் எங்கள் மீது அந்த சோதனையாக காலகட்டம் வந்து விட்டது.

(முஸ்னத் அஹ்மத் பின் ஹம்பல் தொகுதி 1 பக்கம் 451 முஸ்னத் சுபைர் பின் அல் அவாம், ஹதீஸ் எண் 1414 – 1998 ஆம் ஆண்டு பைரூத்திலுள்ள தாருல் குதுபுல் இல்மிய்யாவில் அச்சிடப்பட்டது)

ஹஸ்ரத் முஸ்லிஹ் மவ்வூது (ரலி) அவர்கள் ஹஸ்ரத் அலி (ரலி) அவர்களின் கிலாஃபத் தேர்ந்தெடுக்கப்பட்டது தொடர்பான சூழல்களைப் பற்றி குறிப்பிட்டவாறு கூறுகின்றார்கள்:

ஹஸ்ரத் உஸ்மான் (ரலி) அவர்களின் ஷஹாதத் சம்பவம் நடைபெற்றபோது மதீனாவில் முஸ்லிம்களுக்கு மத்தியில் குழப்பம் அதிகமாகி வருவதை சஹாபாக்கள் கண்டனர். எனவே அவர்கள் ஹஸ்ரத் அலி (ரலி) அவர்களை மக்களிடம் பைஅத் வாங்கும்படி அழுத்தம் கொடுத்தார்கள். மற்றொரு பக்கம் சில குழப்பவாதிகள் தப்பித்து வந்து ஹஸ்ரத் அலி (ரலி) அவர்களை வந்தடைந்தார்கள். மேலும் தற்போது இஸ்லாமிய அரசாங்கங்கள் உடைந்து விடுவதற்கு கடுமையான அபாயம் உள்ளது. எனவே நீங்கள் மக்களின் அச்சத்தை போக்குவதற்கு மக்களிடம் பைஅத் வாங்குங்கள் என்று கூறினர். ஏனென்றால் அதன் மூலம் அமைதி நிலைபெறும் என்று கூறினர்.

சுருக்கமாக, பைஅத் வாங்கும்படி அன்னார் நிர்பந்தத்திற்கு உள்ளாக்கப்பட்டார்கள். அப்போது அன்னார் பல முறை மறுத்த பிறகு அன்னார் அந்த பொறுப்பை ஏற்றுக் கொண்டார்கள். மக்களிடம் அன்னார் பைஅத் வாங்கத் தொடங்கினார்கள். சில பெரிய சஹாபாக்கள் அப்போது மதீனாவிலிருந்து வெளியே இருந்தார்கள். சிலரிடம் நிர்பந்தத்திற்கு ஆளாக்கப்பட்டு பைஅத் வாங்கப்பட்டது. அந்த அடிப்படையில் ஹஸ்ரத் தல்ஹா மற்றும் ஹஸ்ரத் சுபைர் அவர்கள் தொடர்பாக வருகின்றது. அவர்கள் சார்பாக ஹஸ்ரத் ஹகீம் பின் ஜபலா மற்றும் மாலிக் பின் அஷ்தர் ஆகியோர் சில நபர்களுடன் அனுப்பி வைக்கப்பட்டார்கள். அவர்கள் வாளின் அடையாளத்தைக் கொண்டு பைஅத் செய்யும்படி தூண்டினார்கள். அதாவது அவர்கள் வாளை ஏந்திக் கொண்டு அவர்களுக்கு முன்னால் நின்று கொண்டார்கள். மேலும் ஹஸ்ரத் அலி (ரலி) அவர்களிடம் பைஅத் செய்ய வேண்டும் என்றால் செய்யுங்கள். இல்லையென்றால் நாங்கள் இப்போதே உங்களை கொன்று விடுவோம் என்று கூறினர்.

சில அறிவிப்புகளில் இந்த குறிப்பும் வந்துள்ளது. அவர்களை மிகக் கடுமையாக நிலத்தில் இழுத்துக் கொண்டே வந்தனர். இதுபோன்ற ஒரு பைஅத் பைஅத்தே அல்ல என்பது வெளிப்படையாகும். அவர்கள் பைஅத் செய்தபோது கூறினார்கள்: நாங்கள் இந்த நிபந்தனையின் அடிப்படையில் பைஅத் செய்கின்றோம். ஹஸ்ரத் உஸ்மான் அவர்களின் கொலையாளிகளை நீங்கள் தண்டிக்க வேண்டும். ஆனால் பிற்காலத்தில் ஹஸ்ரத் அலி (ரலி) அவர்கள் கொலையாளிகளை தண்டிப்பதில் விரைவு காட்டாதபோது அவர்கள் பைஅத்திலிருந்து விலகி விட்டார்கள். மேலும் மக்காவிலிருந்து மதீனாவிற்கு சென்று விட்டார்கள். அந்த மக்களை சார்ந்த ஒரு கூட்டத்தினரே ஜிஹாதிற்கான அறிவிப்பையும் செய்தனர். எனவே அவர்கள் இவ்வாறு அறிவிப்பு செய்தனர். மேலும் சஹாபாக்களை தமது உதவிக்காக அழைத்தனர். ஹஸ்ரத் தல்ஹா மற்றும் ஹஸ்ரத் சுபைர் அவர்களும் அவர்களுடன் இணைந்து கொண்டனர். அதன் விளைவாக ஹஸ்ரத் அலி (ரலி), ஹஸ்ரத் ஆயிஷா (ரலி), ஹஸ்ரத் தல்ஹா (ரலி), ஹஸ்ரத் சுபைர் (ரலி) ஆகியோருக்கிடையில் போர் மூண்டது. அது ஒட்டகப் போர் என்று கூறப்படுகிறது.

அந்த போரின் தொடக்கத்திலேயே ஹஸ்ரத் சுபைர் அவர்கள் ஹஸ்ரத் அலி அவர்களின் நாவிலிருந்து ஹஸ்ரத் நபிகள் நாயகம் (ஸல்) அவர்களின் ஒரு முன்னறிவிப்பை செவியுற்று போர் களத்திலிருந்து விலகி விட்டார்கள். ஹஸ்ரத் சுபைர் அவர்கள் ஆரம்பத்திலேயே போரிலிருந்து தன்னை விலக்கிக் கொண்டார்கள். மேலும் ஹஸ்ரத் அலி (ரலி) அவர்களுக்கு எதிராக போர் செய்ய மாட்டேன் என்று அன்னார் சத்தியம் செய்தார்கள். மேலும் புரிதலில் தனக்கு தவறு ஏற்பட்டு விட்டதாகவும் அன்னார் ஒப்புக் கொண்டார்கள். மற்றொரு பக்கம் ஹஸ்ரத் தல்ஹா அவர்களும் தனது மரணத்திற்கு முன்பாக ஹஸ்ரத் அலி (ரலி) அவர்களிடம் பைஅத் செய்வதாக ஒப்புக் கொண்டார்கள். ஏனென்றால் அறிவிப்பில் இவ்வாறு வருகின்றது. அன்னார் கடுமையான காயங்களால் துடித்துக் கொண்டிருந்தார்கள். அப்போது ஒரு நபர் அன்னாரை கடந்து சென்றார். அவர் அன்னாரிடம் நீர் எந்த கூட்டத்தைச் சார்ந்தவர் ஆவீர் என்று கேட்டார். அதற்கு அன்னார்

நான் அலி அவர்களின் கூட்டத்தைச் சார்ந்தவன் ஆவேன் என்று கூறினார்கள். மேலும் அன்னார் அந்த நபரிடம், உமது இந்த கரம் அலியின் கரமாகும். நான் உமது கரத்தில் ஹஸ்ரத் அலி அவர்களிடம் மீண்டும் பைஅத் செய்கின்றேன் என்று கூறி தனது கரத்தை அந்த நபரிடம் ஒப்படைத்தார்கள்.

(கிலாஃபத்தே ராஷிதா, பக்கம் 44,45 அன்வாருல் உலூம் தொகுதி 15)

எவ்வாறிருப்பினும், ஹஸ்ரத் சுபைர் அவர்களைப் பற்றி எழுதப்பட்டுள்ளது. ஹஸ்ரத் சுபைர் அவர்களின் ஷஹாதத் சம்பவம் ஒட்டகப் போரிலிருந்து திரும்பி வரும்போது நிகழ்ந்தது. ஹஸ்ரத் அலி அவர்களுக்கு எதிராக சண்டையிடுவதிலிருந்து அன்னார் விலகிக் கொண்டார்கள். தனது தவறையும் ஒப்புக் கொண்டிருந்தார்கள். ஆனால் ஒட்டகப் போரிலிருந்து திரும்பி வரும்போது அன்னார் ஷஹீதானார்கள். ஹஸ்ரத் அலி அவர்கள் அன்னாருக்கு நினைவூட்டினார்கள். நான் உமக்கு அல்லாஹ்வின் பெயரால் கூறுகின்றேன். நீர் ஹஸ்ரத் நபிகள் நாயகம் (ஸல்) அவர்கள் இவ்வாறு கூற கேட்கவில்லையா? அதாவது அன்னார் கூறி இருந்தார்கள். நீர் அலி அவர்களுடன் போரிடுவீர். மேலும் உம் புறமிருந்து வரம்பு மீறுதல் நிகழும்.

அதற்கு அன்னார், ஆம் எனக்கு நினைவில் இருக்கிறது என்று கூறினார்கள். இப்போது நினைவு வந்து விட்டதாகவும் கூறினார். பின்னர் அவர் திரும்பி சென்று விட்டார். இதுவே ஹஸ்ரத் அலி அவர்களுக்கு எதிராக போரிடுவதிலிருந்து அன்னார் விலகியதற்கான காரணமாக அமைந்தது. இது பற்றிய விளக்கம் ஹஸ்ரத் தல்ஹா பின் உபைதுல்லாஹ் அவர்களின் நற்குறிப்பில் ஏற்கனவே கூறப்பட்டு விட்டது. அதிலிருந்து நமக்கு தெளிவாக்குவது என்னவென்றால், குழப்பவாதிகள் மற்றும் நயவஞ்சகர்கள் மூட்டியிருந்த நெருப்பின் காரணமாக பெரும்பாலான சஹாபாக்கள் தவறான புரிதலின் அடிப்படையில் அதில் பங்கு பெற்று விட்டார்கள். எவ்வாறிருப்பினும் என்ன நடந்ததோ அது தவறாக நடந்தது.

ஹரப் பின் அபுல் அஸ்வத் கூறுகின்றார்கள்: நான் ஹஸ்ரத் அலி அவர்களையும் ஹஸ்ரத் சுபைர் அவர்களையும் சந்தித்திருக்கின்றேன். ஹஸ்ரத் சுபைர் தனது சவாரியில் ஏறி போர் வரிசைகளைத் தாண்டி திரும்பி வந்தபோது அன்னாரின் மகனாகிய அப்துல்லாஹ் அன்னாருக்கு முன் வந்து தங்களுக்கு என்ன ஆகிவிட்டது என்று கேட்டார். ஹஸ்ரத் சுபைர் அவர்கள் அவரிடம் எனக்கு ஒரு ஹதீஸை ஹஸ்ரத் அலி அவர்கள் நினைவூட்டி விட்டார்கள். அதனை நான் ஹஸ்ரத் நபிகள் நாயகம் (ஸல்) அவர்களின் அருளுக்குரிய நாவிலிருந்து கேட்டிருக்கின்றேன். அன்னார் கூறி வந்தார்கள். நீர் ஹஸ்ரத் அலி அவர்களுடன் போரிடுவீர். அந்த போரில் நீர் அநீதியிழைக்கக் கூடியவராக இருப்பீர் என்று அன்னார் கூறினார்கள். எனவே நான் அன்னாருக்கு எதிராக போரிட மாட்டேன்.

அதற்கு அன்னாரின் மகன், நீங்கள் இதனால் வந்துள்ளீர்கள் என்றால் நீங்கள் மக்களுக்கு மத்தியில் சமாதானத்தை ஏற்படுத்துங்கள். மேலும் அல்லாஹ் உங்களுடன் இந்த விவகாரத்தில் சமாதானத்தை செய்து கொள்வான் என்று கூறினார்கள். அதற்கு ஹஸ்ரத் சுபைர் அவர்கள் கூறினார்கள்: நான் சத்தியம் செய்து விட்டேன். ஹஸ்ரத் அப்துல்லாஹ் பின் சுபைர் அவர்கள் கூறினார்கள். நீங்கள் அந்த சத்தியத்திற்கு பரிகாரம் செய்து கொள்ளுங்கள். மேலும் நீங்கள் உங்களது அடிமையான ஜர்ஜஷை விடுதலை செய்து விடுங்கள். மேலும் நீங்கள் இங்கேயே இருங்கள். எந்த அளவுக்கு என்றால் அல்லாஹ் அவர்களுக்கு மத்தியில் சமாதானத்தை ஏற்படுத்தி விடட்டும் என்று கூறினார்கள்.

அறிவிப்பாளர் கூறுகின்றார்: ஹஸ்ரத் சுபைர் அவர்கள் தனது அடிமை ஜர்ஜஷை விடுதலை செய்தார்கள். மேலும் அங்கேயே தங்கி இருந்தார்கள். ஆனால் மக்களுக்கு மத்தியில் கருத்து வேறுபாடு மேலும் அதிகமாகிக் கொண்டே சென்றது. எனவே அன்னார் தனது குதிரையில் ஏறி அங்கிருந்து சென்று விட்டார்கள். ஹஸ்ரத் சுபைர் அவர்கள் மதீனாவை நோக்கி திரும்பிச் செல்ல எண்ணி புறப்பட்டார்கள். மேலும் ஷஃப்வான் என்ற இடத்தை அடைந்தார்கள். அது பஸ்ராவிற்கு அருகிலுள்ள இடமாகும். அங்கு பக்ர் என்ற பெயர் கொண்ட ஒருவன் ஹஸ்ரத் சுபைர் அவர்களை சந்தித்தான். அவன் பனூ மஜாஷா கோத்திரத்தைச் சார்ந்தவனாக இருந்தான்.

அவன் கூறினான்: அல்லாஹ்வின் தூதரின் ஹவாரியே! நீர் எங்கே சென்று கொண்டிருக்கின்றீர். தாங்கள் எனக்கு பொறுப்பாளர் ஆவீர்கள். உங்களை எவரும் வந்தடைய முடியாது என்றும் கூறினான். அந்த நபர் ஹஸ்ரத் சுபைர் அவர்களுடன் செல்லத் தொடங்கினான். அஹ்னஃப் பின் கைஸ் என்ற நபரை அவன் சந்தித்தான். அவன் இது சுபைர் ஆவார் என்று கூறினான். அஹ்னஃப் கூறினான்: முஸ்லிம்களின் இரண்டு கூட்டத்தினர் தங்களுக்குள் சண்டையிட்டுக் கொள்கின்றனர். மேலும் வாள்களால் ஒருவர் மற்றவரது தலையை வெட்டிக் கொள்கின்றனர். ஆனால் இவரோ தனது மகன்கள் மற்றும் குடும்பத்தினரை சந்திக்கச் செல்கின்றார் என்று கூறினான்.

உமைர் பின் ஜர்மூஸ், ஃபஸாலா பின் ஜாபஸ், நஃபீல் ஆகியோர் இதனை கேட்டதும் அவர்கள் தமது சவாரியில் ஹஸ்ரத் சுபைர் அவர்களை பின்தொடர்ந்து சென்றனர். ஒரு குழுவாக சென்று அன்னாரை பிடித்தனர். உமைர் பின் யர்மூஸ் குதிரை மீது சவாரி செய்து அன்னாருக்கு பின் புறமாக சென்றான். ஹஸ்ரத் சுபைர் அவர்கள் மீது ஈட்டியைக் கொண்டு தாக்கினான். சிறிதளவு காயத்தை ஏற்படுத்தினான். அப்போது ஹஸ்ரத் சுபைர் அவர்களும் சுல்ஃப் ஹமார் என்ற பெயர் கொண்ட குதிரை மீது சவாரி செய்து கொண்டிருந்தார்கள். அவன் மீது தாக்குதல் நடத்தினார்கள்.

இப்னு ஜர்மூஸ் தான் கொலை செய்யப்பட உள்ளோம் என்பதை உணர்ந்தபோது அவன் தனது இரண்டு நண்பர்களையும் குரல் கொடுத்து அழைத்தான். அவர்களும் இணைந்து கொண்டு தாக்குதல் தொடுத்தனர். எந்த அளவுக்கு என்றால் அவர்கள் ஹஸ்ரத் சுபைர் (ரலி) அவர்களை ஷஹீதாக்கி விட்டனர்.

மற்றொரு அறிவிப்பில் வருகிறது. ஹஸ்ரத் சுபைர் (ரலி) அவர்கள் தனது கொலையாளியின் மீது முதலில் மேலோங்கி விட்டார்கள். ஆனால் அவன் நான் அல்லாஹ்விற்காக உங்களிடம் வேண்டுகிறேன் என்று கூறினான். அதைக் கேட்ட ஹஸ்ரத் சுபைர் (ரலி) அவர்கள், தனது வாளை கீழே போட்டு விட்டார்கள். அந்த நபர் இந்த செயலை பல முறை செய்தான். பின்னர் ஹஸ்ரத் சுபைர் அவர்களுக்கு எதிராக கிளர்ச்சி செய்து அன்னாரை காயப்படுத்தியபோது ஹஸ்ரத் சுபைர் அவர்கள், அல்லாஹ் உன்னை நாசமாக்குவானாக. நீ என்னிடம் அல்லாஹ்வின் பெயரால் வேண்டிக் கொண்டிருந்தாய். ஆனால் சுயமே

**ஹஸ்ரத் வாக்களிக்கப்பட்ட மஸீஹ் (அலை) அவர்களின் கூற்றிலிருந்து...**

எப்போதும் இறைவன் என்ற பெயரிலுள்ள அந்த மறைவான கருவூலம் நபிமார்கள் மூலமாகவே அடையாளங்கண்டு கொள்ளப்பட்டிருக்கின்றது. (ஹகீகத்துல் வஹி. ரூஹானி கஸாயின் தொகுதி 22, பக்கம் 117)

A.Basheer Ahmad, Sec.Waqf-e-jadid, Melapalayam

அந்த அல்லாஹ்வை மறந்து விட்டாய் என்று கூறினார்கள்.

ஹஸ்ரத் சுபைர் அவர்கள் ஷஹீதாக்கிய பிறகு இப்னு ஜர்மூஸ் ஹஸ்ரத் அலி அவர்களிடத்தில் ஹஸ்ரத் சுபைர் அவர்களின் தலையையும் அன்னாரின் வாளையும் கொண்டு வந்தான். ஹஸ்ரத் அலி அவர்கள் அந்த வாளை பெற்றுக் கொண்டார்கள். மேலும் கூறினார்கள். இறைவன் மீது ஆணையாக! இந்த வாள் எப்படிப்பட்டதென்றால் இதன் மூலம் ஹஸ்ரத் நபிகள் நாயகம் (ஸல்) அவர்களின் முகத்திலிருந்த கவலை நீங்கியது. ஆனால் தற்போது இந்த மரணம் குழப்பத்தின் கொலை பீடங்களில் நிகழ்ந்துள்ளது. இப்னு ஜர்மூஸ் உள்ளே வர அனுமதி வேண்டினான். காவலாளி ஹஸ்ரத் சுபைர் அவர்களின் கொலையாளியான இப்னு ஜர்மூஸ் வாசலில் நின்று கொண்டு அனுமதி வேண்டுகின்றார் என்று கூறினார். ஹஸ்ரத் அலி (ரலி) அவர்கள் கூறினார்கள். இப்னு ஸஃபிய்யா! ஹஸ்ரத் சுபைர் அவர்களை ஷஹீதாக்கக்கூடியவர். நரகத்தில் நுழைவார். நான் ஹஸ்ரத் நபிகள் நாயகம் (ஸல்) அவர்களை இவ்வாறு கூறக் கேட்டேன். ஒவ்வொரு நபிக்கும் ஒரு ஹவாரி உண்டு. எனது ஹவாரி சுபைர் ஆவார்.

ஹஸ்ரத் சுபைர் சவா என்ற பள்ளத்தாக்கில் அடக்கம் செய்யப்பட்டார். ஹஸ்ரத் அலி மற்றும் அவரது தோழர்கள் அமர்ந்து கொண்டு அன்னாரின் மரணத்தால் கண்ணீர் வடித்தனர். ஷஹாதத்தின்போது ஹஸ்ரத் சுபைர் அவர்களின் வயது 64 ஆக இருந்தது. சிலரது பார்வையில் 66 அல்லது 67 ஆக இருந்தது.

(முஸ்தத்ரிக் அலஸ் ஸஹீஹைன் லில்ஹாகிம் தொகுதி 3 பக்கம் 413, ஹதீஸ் எண் 5575 பைரூத்திலுள்ள தாருல் குதுபுல் இல்மிய்யாவில் அச்சிடப்பட்டது & அல் இஸ்திஆப் ஃபீ மஃரூஃபத்துல் அஸ்ஹாப் தொகுதி 2 பக்கம் 516, சுபைர் பின் அல் அவாம் – 1996 ஆம் ஆண்டு பைரூத்திலுள்ள தாருல் குதுபுல் இல்மிய்யாவில் அச்சிடப்பட்டது & முஸ்தத்ரிக் அலஸ் ஸஹீஹைன் லில்ஹாகிம் தொகுதி 3 பக்கம் 78 சுபைர் பின் அல் அவாம் – 1990 ஆம் ஆண்டு பைரூத்திலுள்ள தாருல் குதுபுல் இல்மிய்யாவில் அச்சிடப்பட்டது & அத்தப்காத்துல் குப்ரா லாபின் சஅத் தொகுதி 3 பக்கம் 83 – 1990 ஆம் ஆண்டு பைரூத்திலுள்ள தாருல் குதுபுல் இல்மிய்யாவில் அச்சிடப்பட்டது & அல் அஸாபா ஃபீ தமீஸில் சஹாபா தொகுதி 2 பக்கம் 460 சுபைர் பின் அல் அவாம் – 1995 ஆம் ஆண்டு பைரூத்திலுள்ள தாருல் குதுபுல் இல்மிய்யாவில் அச்சிடப்பட்டது)

ஹஸ்ரத் ஆதிக்கா பின்த் ஸைது ஹஸ்ரத் சுபைர் அவர்களின் மனைவி ஆவார்கள். அன்னாரைப் பற்றி மதீனாவாசிகள் இவ்வாறு கூறி வந்தார்கள். எந்த நபர் ஷஹீதாக விரும்புகின்றாரோ அவர் ஆதிக்கா பின்த் ஸைதை திருமணம் செய்து கொள்ளட்டும். அப்துல்லாஹ் பின் அபீ பக்ர் முதலில் அன்னாரை திருமணம் செய்திருந்தார். அன்னார் ஷஹீதாகி அந்த பெண்மணியை பிரிந்தார்கள். பின்னர் ஹஸ்ரத் உமர் பின் கத்தாப் அவர்கள் அன்னாரை திருமணம் புரிந்தார்கள். அன்னாரும் ஷஹீதானதால் அன்னார் அவரை விட்டு பிரிந்தார்கள். பிறகு ஹஸ்ரத் சுபைர் பின் அவாம் அவர்களை திருமணம் புரிந்தார்கள். அவர்களும் ஷஹீதாகி அன்னாரை விட்டு பிரிந்து விட்டார்கள்.

ஹஸ்ரத் சுபைர் அவர்களின் ஷஹாதத்தின்போது ஹஸ்ரத் ஆதிக்கா அவர்கள் இந்த கவிதை வரிகளை படித்தார்கள்.

غَدَرَ ابْنُ جُرْمُوزٍ بِفَارِسٍ بُهْمَةٍ — يَوْمَ اللِّقَاءِ وَ كَانَ غَيْرَ مُعَرِّدِ
يَا عَمْرُو لَوْ نَبَّهْتَهُ لَوَجَدْتَهُ — لَا طَائِشًا رَعِشَ الْجَنَانِ وَلَا الْيَدِ
شَلَّتْ يَمِيْنُكَ إِنْ قَتَلْتَ لَمُسْلِمًا — حَلَّتْ عَلَيْكَ عُقُوْبَةُ الْمُتَعَمِّدِ
ثَكِلَتْكَ أُمُّكَ هَلْ ظَفِرْتَ بِمِثْلِهِ — فِيْمَنْ مَضٰى فِيْمَا تَرُوْحُ وَ تَغْتَدِيْ
كَمْ غَمْرَةٍ قَدْ خَاضَهَا لَمْ يَثْنِهِ — عَنْهَا طِرَادُكَ يَا ابْنَ فَقْعِ الْقَرْدَدِ

இப்னு ஜர்மூஸ் போர் நாளன்று அந்த வீரமிக்க நபரை ஏமாற்றினான். அவரோ ஓடக் கூடியவர் அல்ல. அம்ர் பின் ஜர்மூஸே! நீ கூறியிருந்தால் நீ அவரை இந்நிலையில் கண்டிருப்பாய். அதாவது அவரைக் கண்டு அஞ்சாத உள்ளமும் கையும் இருந்திருக்காது. மேலும் உமது கை துண்டிக்கப்படட்டுமாக. நீ ஒரு முஸ்லிமை கொலை செய்திருக்கின்றாய். வேண்டுமென்றே கொலை செய்த குற்றத்திற்கான தண்டனை உன் மீது ஆகுமானதாகி விட்டது. நீ இழிவடைவாயாக. நீ பகலையும், நாளையும் கழிக்கின்ற உமது இக்காலத்தில் அவரைப் போன்ற வேறு எவர் மீதும் வெற்றி பெறவில்லை. சிறிய துன்பத்தை கூட சகிக்க முடியாதவனே! சுபைர் எத்தகைய மனிதராக இருந்தார் என்றால் எத்தனை கடினமான சூழல்கள் இருந்தாலும் அன்னார் போரிலேயே மும்முரமாக இருந்தார்கள். வெள்ளை முகம் கொண்டவனே! உமது வாளின் தாக்குதல்கள் அவரை எந்த வகையிலும் பாதிப்பிற்குள்ளாக்க முடியாது.

(அத்தப்காத்துல் குப்ரா லாபின் சஅத் தொகுதி 3 பக்கம் 83 – 1990 ஆம் ஆண்டு பைரூத்திலுள்ள தாருல் குதுபுல் இல்மிய்யாவில் அச்சிடப்பட்டது)

தப்காத்துல் குப்ராவில் இந்த அறிவிப்பு வந்துள்ளது. இப்னு ஜர்மூஸ் ஹஸ்ரத் அலி அவர்களிடம் அனுமதி கேட்டபோது ஹஸ்ரத் அலி அவர்கள் அவர்களிடமிருந்து விலகி இருக்கவே விரும்பினார்கள். அப்போது அவன் சுபைர் துன்பம் தருபவர்களை சார்ந்தவராக இருக்கவில்லையா? என்று கேட்டான். ஹஸ்ரத் அலி அவர்கள் கூறினார்கள்: உமது முகம் மண்ணாகட்டுமாக. நான் நம்புகின்றேன். தல்ஹா மற்றும் சுபைர் அவர்கள் எப்படிப்பட்டவர்கள் என்றால் அவர்கள் இந்த வசனத்திற்கு உரியவர்களாக இருந்தார்கள். அல்லாஹ் அவர்களைப் பற்றி இந்த வசனத்தில் கூறுகின்றான்.

وَنَزَعْنَا مَا فِيْ صُدُوْرِهِمْ مِّنْ غِلٍّ اِخْوَانًا عَلٰى سُرُرٍ مُّتَقٰبِلِيْنَ

நாம் அவர்களின் உள்ளங்களிலுள்ள பகைமையை அகற்றி விடுவோம். அவர்கள் அரியணைகளில் சகோதரர்களாக ஒருவருக்கு முன் ஒருவராக அமர்வார்கள்.

(அத்தப்காத்துல் குப்ரா லாபின் சஅத் தொகுதி 3 பக்கம் 84 – 1990 ஆம் ஆண்டு பைரூத்திலுள்ள தாருல் குதுபுல் இல்மிய்யாவில் அச்சிடப்பட்டது)

ஹஸ்ரத் சுபைர் அவர்கள் பல திருமணங்களை செய்திருந்தார்கள். ஏராளமான பிள்ளைகள் அன்னாருக்கு பிறந்தன. அதன் விவரம் இவ்வாறாகும். ஹஸ்ரத் அஸ்மா பின்த் அபூபக்ர் அவர்கள் மூலம் அப்துல்லாஹ் என்ற மகனும், உர்வா, முன்ஸிர், ஆஸிம், கதீஜத்துல் குப்ரா, உம்முல் ஹஸன், ஆயிஷா ஆகியோரும் பிறந்தனர். ஹஸ்ரத் உம்மே காலித் அவர்களின் மூலம் காலித், அம்ர், ஹபீபா, சவ்தா, ஹிந்த் ஆகியோர் பிறந்தனர்.

## ஹஸ்ரத் வாக்களிக்கப்பட்ட மஸீஹ் (அலை) அவர்களின் கூற்றிலிருந்து...

உண்மையான தவ்ஹீது, நபியின் மூலமாகவே வெளிப்படுகின்றது. அது அல்லாமல் அது நடக்க முடியாது என்பது தெளிவாக தெரியும் போது அது நபியின் மீது ஈமான் கொள்ளாமல் எப்படி கிடைக்க முடியும்? தவ்ஹீது எவ்வாறு நிலைத்திருக்க முடியும்?

(ஹகீகத்துல் வஹி. ரூஹானி கஸாயின் தொகுதி 22, பக்கம் 117)

A.Shamsul Alam காயித், மஜ்லிஸ் குத்தாமுல் அஹ்மதிய்யா, மேலப்பாளையம்

ஹஸ்ரத் ருபாப் பின் ஹனீஃப் அவர்கள் மூலமாக முஅஸ்ஸப், ஹம்ஸா, ரம்லா ஆகியோர் பிறந்தனர். ஹஸ்ரத் ஸைனப் உம்மே ஜாஃபர் பின்த் முர்ஸத் அவர்கள் மூலமாக உபைதா மற்றும் ஜாஃபர் என்ற பிள்ளைகள் பிறந்தன. ஹஸ்ரத் உம்மே குல்ஸூம் பின்த் உக்பா அவர்களின் மூலம் ஸைனப் என்ற பெண் குழந்தை பிறந்தது. ஹஸ்ரத் ஹிலால் பின் கைஸ் அவர்கள் மூலமாக கதீஜத்துல் ஸுபுரா என்ற பெண் பிள்ளை பிறந்தது.

(அத்தப்காத்துல் குப்ரா லாபின் சஅத் தொகுதி 3 பக்கம் 74 சுபைர் பின் அல் அவாம் – 1990 ஆம் ஆண்டு பைரூத்திலுள்ள தாருல் குதுபுல் இல்மிய்யாவில் அச்சிடப்பட்டது)

ஹஸ்ரத் ஆதிக்காபின்த் ஸைது அவர்களும் அன்னாரின் மனைவிமார்களில் ஒருவர் ஆவார்கள்.

(அத்தப்காத்துல் குப்ரா லாபின் சஅத் தொகுதி 3 பக்கம் 83 சுபைர் பின் அல் அவாம்– 1990 ஆம் ஆண்டு பைரூத்திலுள்ள தாருல் குதுபுல் இல்மிய்யாவில் அச்சிடப்பட்டது)

ஹஸ்ரத் சுபைர் அவர்களின் அனைத்து சம்பவங்களும் இத்துடன் நிறைவு பெறுகின்றது.

இதன் பிறகு இப்போது நான் சில மர்ஹூமீன்களின் நற்குறிப்பை எடுத்துரைப்பேன். ஜுமுஆவிற்குப் பிறகு அவர்களின் ஜனாஸா தொழுகையையும் தொழ வைப்பேன். அவர்களின் முதன்மையானவர் அல்ஹாஜி இப்ராஹீம் முபாஹி சாஹிப் ஆவார்கள். அவர்கள் நாயிப் அமீர் கேம்பியா ஆவார்கள். அன்னார் ஆகஸ்ட் மாதம் 10 ஆம் தேதி வஃபாத்தாகி விட்டார்கள். إِنَّا لِلّٰهِ وَإِنَّا إِلَيْهِ رَاجِعُوْن

1944 ஆம் ஆண்டு ஜூன் மாதம் 4 ஆம் தேதி பாஞ்சல் என்ற ஊரில் அன்னார் பிறந்தார்கள். மதிப்பிற்குரிய முன்னாள் அமீர் சவுத்ரி ஷரீஃப் சாஹிப் மர்ஹூம் அவர்களின் காலகட்டத்தில் 1961,62 ஆம் ஆண்டுகளில் அன்னார் அஹ்மதிய்யத்தை ஏற்றுக் கொண்டிருந்தார்கள். ஜமாஅத்தின் ஆரம்ப கால உறுப்பினராக இருந்தார்கள். ஐவேளை தொழுகையாளியாகவும், தஹஜ்ஜுத் தொழும் பழக்கமுடையவராகவும் இருந்தார்கள். இறை அருளால் மூஸியாகவும் இருந்தார்கள். பொருள் தியாகத்தில் எப்போதும் முன் நிலையில் இருந்தார்கள்.

அன்னாரின் மகன் கூறுகின்றார்: மர்ஹூம் மரணிப்பதற்கு முன்பாக கூட தஹஜ்ஜுத் தொழுதார்கள். குடிப்பதற்கு தண்ணீர் கேட்டார்கள். பின்னர் அல்லாஹ்வின் சன்னிதியில் ஆஜராகி விட்டார்கள். அன்னார் திருக்குர்ஆனின் நேசராக இருந்தார்கள். தொடர்ந்து பரிசுத்த திருக்குர்ஆனை ஓதி வந்தார்கள். அன்னார் ஒரு நீண்ட காலமாக நாயிப் அமீராக ஜமாஅத்திற்கு தொண்டாற்றும் பாக்கியம் பெற்று வந்தார்கள். அத்துடன் ஜல்ஸா ஸாலானா அதிகாரியாகவும், தேசிய உமூரே கார்ஜா செயலராகவும், கேம்பியாவின் சத்ர் மஜ்லிஸ் அன்ஸாருல்லாஹ் ஆகவும் தொண்டாற்றும் பாக்கியம் பெற்றார்கள். மஸ்ரூர் செகன்டரி பள்ளிக்கூடத்தின் போர்டு உறுப்பினராகவும் இருந்தார்கள். தகுதி பெற்ற ஆசிரியராகவும் இருந்தார்கள். நாட்டின் பல்வேறு பகுதிகளில் ஆசிரியராகவும் தொண்டாற்றி வந்துள்ளார்கள். தனது துறையில் உயர்ந்த கல்வியை பெற்றிருந்தார்கள். மாஸ்டர் செய்வதற்காக அமெரிக்க சென்றார்கள். திரும்பி வந்து தனது நாட்டிற்கும், சமுதாயத்திற்கும் தொண்டாற்றினார்கள். கேம்பியாவில் ஒரு பிரபல்யமான துறை மேனேஜ்மன்ட் டெவலப்மன்ட் இன்ஸ்டிடியூட்டின் நிறுவன உறுப்பினர்களில் ஒருவராக இருந்தார்கள். இந்த நிறுவனம் கேம்பியாவில் சிவில் சர்வன்ஸ் மற்றும் ஏனைய நபர்களுக்கு உயர் தரமான கல்வியை வழங்கி வந்தது. கேம்பியாவின் ஏராளமான பெரும் அரசாங்க உயர் அதிகாரிகள் இந்த நிறுவனத்திலிருந்து கல்வி பயின்றவர்களாக இருந்துள்ளனர்.

அன்னார் தாஹிர் அஹ்மதிய்யா முஸ்லிம் சீனியர் ஸ்கூலின் முதல்வராகவும், நுஸ்ரத் சீனியர் செகன்டரி ஸ்கூலின் தலைமை ஆசிரியராகவும் இருந்துள்ளார்கள். ஏராளமான சொந்த நாட்டின் மக்களுக்கும் அந்நிய நாட்டு மக்களுக்கும் கல்வி வழங்கியுள்ளார்கள். கல்வி சார் துறைகளில் அன்னார் மிக அதிகமாக அறியப்பட்டு வந்துள்ளார்கள். மக்கள் அவரை மை கூநயஉாச என்று அழைத்து வந்தார்கள். அன்னார் தனக்குப் பிறகு இரண்டு மனைவிகளையும், ஏழு மகன்களையும், இரண்டு மகள்களையும் விட்டுச் சென்றுள்ளார்கள். அன்னாரின் ஒரு மனைவி மிஸ் அகீபா சாஹிபா ஆவார்கள். அன்னார் கேம்பியாவின் சத்ர் லஜ்னாவாக உள்ளார்கள். அன்னாரின் ஒரு மகன் வாழ்க்கையை அர்ப்பணித்தவர் ஆவார்கள். ஜாமிஅத்துல் முபஷ்ஷிரீனில் பட்டம் பெற்றுள்ளார். அதேபோன்று மற்றொரு மகன் குத்தாமுல் அஹ்மதிய்யாவின் சதராகவும் இருந்துள்ளார். அமெரிக்காவில் இரண்டு மகள் உள்ளனர். ஒரு மகள் யூ.கேவில் வசிக்கின்றார்.

அல்லாஹ் மர்ஹூமுடன் கருணையுடனும், பாவ மன்னிப்புடனும் நடந்து கொள்வானாக. அன்னாரின் பிள்ளைகளை அன்னாரின் விருப்பத்திற்கேற்ப எப்போதும் மார்க்கத்துடன் தொடர்புடையவர்களாக வைப்பானாக.

அமீர் சாஹிப் கேம்பியா எழுதுகின்றார்கள்: நான் கூட கராயா பாயி லேண்ட் மிடில் ஸ்கூலில் அன்னாரின் மாணவனாக இருந்துள்ளேன். இங்குள்ள அனைத்து அஹ்மதி மாணவர்களும் ஏனைய முஸ்லிம் மாணவர்களுடன் இணைந்து வியாழக்கிழமை அன்று இஸ்லாமிய வகுப்பு ஒன்றை நடத்தி வந்தனர். மர்ஹூம் அவர்களும் அந்த வகுப்பை நடத்தி வந்தார்கள். அன்னார் ஜமாஅத் பொறுப்பாளர்களுக்கும், ஜமாஅத் அமைப்பிற்கும் மிகுந்த கண்ணியம் அளித்து வந்தார். அன்னார் எனது ஆசிரியராக இருந்தார்கள். ஆனால் அதன் பிறகும் அமீர் என்ற நிலையில் எனக்கும் ஏனைய பொறுப்பாளர்களுக்கும் முழுமையாக கட்டுப்பட்டு நடந்தார்கள். மிகவும் கலப்பற்ற உழைப்பாளியாகவும், திறந்த மனம் படைத்தவராகவும் இருந்தார்கள்.

கிலாஃபத்திற்கு நன்றியுணர்வுமிக்கவராகவும், கட்டுப்பட்டு நடப்பவராகவும் இருந்தார்கள். காலத்தின் கலீஃபாவுடன் அன்பு மற்றும் நேசத்தின் தொடர்பு இருந்தது. எப்போதும் ஜமாஅத் மற்றும் கிலாஃபத்தின் பாதுகாப்பில் முன்னனியில் நின்றார்கள். நல்ல மார்க்க அறிவும் கொண்டிருந்தார்கள். ஆதாரங்கள் மூலம் பேசி வந்தார்கள். நுட்பமான ஞானத்துடன் பேசி வருவார்கள். புதிய தொழில்நுட்பத்தின் மூலம் பல்வேறு வழிமுறைகளின் மூலம் ஹஸ்ரத் வாக்களிக்கப்பட்ட மஸீஹ் (அலை) அவர்களின் தூதுச் செய்தியை சென்றடையச் செய்வதற்கு முயற்சி செய்து வந்தார்கள். தப்லீக்கில் ஈடுபட்டு வந்தார்கள்.

இரண்டாவது ஜனாஸா அப்துல் ஜலீல் கான் சாஹிப் அவர்களின் மகனாகிய மதிப்பிற்குரிய நயீம் அஹ்மது கான் சாஹிப் அவர்களுடையதாகும். அன்னார் கராச்சியின் நாயிப் அமீராக இருந்தார்கள். அன்னார் மரணமடைந்து 2,3 மாதங்கள் ஆகிவிட்டன. ஏப்ரல் மாதத்தின் இறுதியில் அன்னார் மரணமடைந்தார்கள். إِنَّا لِلّٰهِ وَإِنَّا إِلَيْهِ رَاجِعُوْن

அன்னாரின் குடும்பத்தில் முதல் முதலில் மதிப்பிற்குரிய அக்தர் அலி சாஹிப் அவர்கள் மூலம் அஹ்மதிய்யத் தோன்றியது. அன்னார் ஹஸ்ரத் வாக்களிக்கப்பட்ட மஸீஹ் (அலை) அவர்களின் சஹாபியான மவ்லவி ஹஸன் அலி சாஹிப் பாகல் பூரி அவர்கள் மூலம் பைஅத் செய்திருந்தார்கள். நயீம் கான் சாஹிப் இந்தியாவிலுள்ள பட்னாவில் பீகாரில் மெட்ரிக் படித்தார்கள். 1948 ஆம் ஆண்டு பாகிஸ்தான் உருவான பிறகு லாஹூர் வந்து விட்டார்கள்.

டயால்சிங் கல்லூரியில் இன்டர் கல்வியை கற்றார்கள். டி.ஐ கல்லூரி லாஹூரில் எம்.எஸ்.ஸி பயின்றார்கள். பின்னர் லண்டன் சென்று விட்டார்கள். 1959 ஆம் ஆண்டு கராச்சிக்கு திரும்பி வந்து கேஸ் கம்பெனியில் பணி செய்தார்கள். 1993 ஆம் ஆண்டு சீனியர் ஜெனரல் மேனேஜர் என்ற பொறுப்பிலிருந்து அன்னார் ஓய்வு பெற்றார்கள்.

மஜ்லிஸ் குத்தாமுல் அஹ்மதிய்யா கராச்சியில் துணை நாஸிர் கைவினை மற்றும் வியாபாரம் துறையின் தொண்டை தொடங்கினார்கள். அதன் பிறகு கராச்சியின் நாயிப் காயித் மஜ்லிஸ் குத்தாமுல் அஹ்மதிய்யாவாகவும் நியமிக்கப்பட்டார்கள். பின்னர் மஜ்லிஸ் குத்தாமுல் அஹ்மதிய்யாவின் காயித் ஆகவும் தேர்ந்தெடுக்கப்பட்டார்கள். நான்கு ஆண்டுகள் வரை தொண்டாற்றினார்கள். பின்னர் அன்ஸாருல்லாஹ் மார்டின் மார்டன் ரோடு கராச்சியின் ஸயீமே ஆலாவாக இருந்தார்கள். பின்னர் கராச்சியின் மாவட்ட நாஸிம் அன்ஸாருல்லாஹ் ஆகவும் இருந்தார்கள். பின்னர் மண்டல நாஸிர் அன்ஸாருல்லாஹ் ஆகவும் நியமிக்கப்பட்டார்கள். 1997 ஆம் ஆண்டு கராச்சியின் வக்ஃபே ஜதீது செகரட்டரியாக நியமிக்கப்பட்டார்கள். 2019 ஆண்டு வரை இந்த பொறுப்பில் அன்னார் இருந்தார்கள். நீண்ட காலம் கராச்சியின் நாயிப் அமீராக தொண்டாற்றும் பாக்கியம் பெற்றுள்ளார்கள். ஃபஸ்லே உமர் ஃபவுண்டேஷனின் டைரக்டராகவும் அன்னார் இருந்துள்ளார்கள். இன்டர்நேஷனல் அஷோஷியன் ஆஃப் அஹ்மதிய்யா ஆட்கிடெக்ட், இஞ்ஜினியர்ஸ் அமைப்பின் முதல் செயற்குழுவின் ஆடிட்டராக தொண்டாற்றி உள்ளார்கள். பல ஆண்டுகள் அதன் கராச்சி சேப்டரின் தலைவராகவும் இருந்துள்ளார்கள்.

1970 ஆம் ஆண்டு தாருஸ் ஸியாஃபத் ரப்வாவில் ஜல்ஸா ஸாலானாவிற்காக ரொட்டு தயாரிக்கும் மிஷினை நிறுவுவதற்கு திட்டம் வகுக்கப்பட்டது. மிஷின் தயாரிக்கும் பணி துவங்கி இருந்தது. அப்போது அன்னார் இஞ்ஜினியராக அந்த பணியில் பங்கு பெறும் கௌரவத்தை பெற்றிருந்தார்கள்.

அன்னாரின் மகள் அம்மாரா சாஹிபா எழுதுகின்றார்கள்: எனது தந்தையார் எனது தாயின் மறைவிற்குப் பிறகு ஒரு பரிவுமிக்க தந்தையாக மட்டுமல்ல; மாறாக, எங்களை பராமரிக்கும் ஒரு நல்ல தாயாகவும் ஒரு அனுதாபமிக்க தோழனாகவும் மிக அழகிய முறையில் எங்களுடன் நடந்து கொண்டார்கள். எப்போதும் கிலாஃபத்துடன் நன்றியுற்றவராகவும், தொழுகையை பேணுபவராகவும், ஜமாஅத்துடன் தொடர்பு வைப்பதற்கு படிப்பினை வழங்குபவராகவும் இருந்து வந்தார்கள்.

அன்னாரின் மருமகன் டாக்டர் கஃப்பார் சாஹிப் எழுதுகின்றார்கள்: எனக்கு அன்னாருடன் 30 ஆண்டுகளுக்கு முன் தொடர்பு ஏற்பட்டது. இந்த 30 ஆண்டுகளில் மர்ஹூமை மிக அருகிலிருந்து பார்க்கும் சந்தர்ப்பம் கிடைத்தது. அன்னாரின் தோழமையும் நெருக்கமும் எனது வாழ்க்கையில் மிகவும் நேர்மறையான தாக்கத்தை ஏற்படுத்தியுள்ளது. மர்ஹூம் மிகவும் தூய்மையானவராகவும், எளிமையானவராகவும் இருந்தார்கள். இறை வணக்கத்தில் ஆர்வம் கொண்டவராகவும், பொறாமை கொள்ளத்தக்கவராகவும் இருந்தார்கள். தஹஜ்ஜுத் தொழுவது அன்றாட வழக்கமாக இருந்தது. இறுதி நாட்களில் பக்கவாத நோயின் தாக்குதலினால் சுயமே நடக்க இயலாதவராக இருந்தார்கள். அந்த நேரத்திலும் கூட தனது அன்றாட பணிகளில் சிறிதளவும் தெய்வு ஏற்பட அனுமதிக்கவில்லை. அன்னாருக்கு நியமிக்கப்பட்டிருந்த மேல் நர்ஸ்கள் கூறுவார்கள். என்னை இந்த நேரத்தில் எழுப்பி அமரச் செய்த விட வேண்டும். அதன் பிறகு நாற்காலியில் அமர்ந்து பணிகளை முறையாக தஹஜ்ஜுத் தொழுகையிலிருந்து ஆரம்பம் செய்வார்கள். லேப்டாப் மூலம் இயலாமைக்கு மத்தியிலும் மார்க்க பணிகளை செய்து கொண்டிருப்பார்கள்.

முரப்பி சாஹிப் நஸீம் தபஸ்ஸும் சாஹிப் கூறுகின்றார்கள்: எப்போதும் அன்னாரின் முகத்தில் புன்முறுவல் இருக்கும். நோயுற்றிருந்தபோதிலும் அலுவலகத்திற்கு வருவார்கள். வாழ்க்கையை அர்ப்பணித்தவர்களுடனும் மிகுந்த அன்புடனும், மிகுந்த மரியாதையுடனும் நடந்து கொள்வார்கள். அல்லாஹ் மர்ஹூமுடன் பாவ மன்னிப்பு மற்றும் கருணையுடன் நடந்து கொள்வானாக. அந்தஸ்தை உயர்த்துவானாக. அன்னாரின் பிள்ளைகளுக்கு அன்னாரின் நன்மைகளை தொடரச் செய்யும் நற்பாக்கியத்தை வழங்குவானாக.

அன்னாரைப் பற்றி மற்றும் ஒரு குறிப்பு உள்ளது. ஸர்சஷ்த் முனீர் சாஹிப் நார்வேயிலிருநது எழுதுகின்றார்கள். மர்ஹூம் மார்க்கத் தொண்டாற்றுவதற்கு எப்போதும் ஆயத்தமாக இருந்தார்கள். கிலாஃபத்துடன் அன்பும், கலப்பற்ற தன்மையும் நன்றியுணர்வுமிக்க தொடர்பையும் எப்போது நிலைநாட்டி வந்தார்கள். நான் மாவட்ட காயித் ஆக தொண்டாற்றும் பாக்கியம் பெற்று வந்தேன். அப்போது அன்னார் மிகவும் உயர்தரமான வழிகளில் எனக்கு வழியாட்டியுள்ளார்கள். எல்லா அமீருடனும் அன்னார் கட்டுப்பட்டும் ஒத்துழைப்பிற்கான சிறந்த தரத்தையும் அன்னார் நிலைநாட்டி இருப்பதை நான் எப்போதும் கண்டு வந்துள்ளேன்.

அடுத்த ஜனாஸா மதிப்பிற்குரிய வலி முஹம்மது சாஹிப் மர்ஹூம் ஜெர்மனி அவர்களின் துணைவியரான புஷ்ரா பேகம் சாஹிபா அவர்களுடையதாகும். அன்னார் ஜூலை 19 ஆம் தேதி தனது 74 வது வயதில் மாரடைப்பின் காரணமாக ஜெர்மனியில் வஃபாத்தாகி விட்டார்கள். إِنَّا لِلّٰهِ وَإِنَّا إِلَيْهِ رَاجِعُوْنَ

அன்னாரின் பாட்டனார் ஹஸ்ரத் மியான் நிஸாமுத்தீன் சாஹிப் அவர்கள் ஹஸ்ரத் வாக்களிக்கப்பட்ட மஸீஹ் (அலை) அவர்களின் சஹாபி ஆவார்கள். மர்ஹூமா தஹஜ்ஜுத் தொழுகையை முறையாக பேணி வந்தார்கள். இதர தொழுகையையும் பேணி வந்தார்கள். விருந்து உபசரிப்பு செய்பவராகவும் இருந்து வந்தார்கள். தேவையுடையவர்களை கருத்தில் கொண்டு வந்தார்கள். பொருள் தியாகத்தில் முன் நின்று வந்தார்கள். நல்ல கலப்பற்ற பெண்மணியாக இருந்தார்கள். கிலாஃபத்துடன் எல்லையற்ற அன்பும், பற்றும் கொண்டிருந்தார்கள். குழந்தைப் பருவம் முதல் பார்வை குறைபாட்டின் காரணமாக முறையாக திருக்குர்ஆன் ஓத முடியாதவர்களாக இருந்தார்கள். ஆனால் திருமணத்திற்குப் பிறகு தனது பிள்ளைகளின் உதவியுடன் சில பாராக்களை மனனம் கூட செய்து கொண்டார்கள். ஆகூஹ வில் திருக்குர்ஆன் திலாஃபத்தை கேட்பது மட்டுமல்லாமல், குத்பாக்களையும் முறையாக கேட்டு வந்தார்கள். என்னுடைய நிகழ்ச்சிகளையும், மற்ற நிகழ்ச்சிகளையும் கேட்டு வந்தார்கள். இறை அருளால் மூஸியாக இருந்தார்கள்.

அன்னார் தனது நினைவாக நான்கு மகன்களையும், இரண்டு மகள்களையும் விட்டுச் சென்றுள்ளார்கள். ஒரு மகன் ஷஃபீக்குர் ரஹ்மான் சாஹிப் முபல்லிக் ஆவார். அவர் நியூஸிலாந்தின் மிஷினரி இன்சார்ஜ் ஆக உள்ளார். மேலும் அதீகுர் ரஹ்மான் சாஹிப் தற்போது வக்ஃப் செய்து இங்கு வந்துள்ளார். இங்கு நமது பி.எஸ் அலுவலகத்தில் பதிவுத் துறையில் பணி செய்து வருகின்றார்.

மிஷனரி இன்சார்ஜ் ஆன ஷபீகுர் ரஹ்மான் சாஹிப் தனது தாயாரின் ஜனாஸாவில் பங்கு பெற முடியவில்லை. மர்ஹூமாவின் நல்லடக்கம் இங்கு நடைபெற்றுள்ளது. அல்லாஹ் அன்னாரது மகனுக்கு அமைதியையும், பொறுமையையும் வழங்குவானாக. மேலும் அல்லாஹ் மர்ஹூமாவுடன் பாவமன்னிப்புடனும், கருணையுடனும் நடந்து கொள்வானாக. மேலும் அன்னாரின் பிள்ளைகளை அன்னாரின் துஆக்களுக்கு வாரிசாக்குவானாக.

தொழுகைக்குப் பிறகு இன்ஷா அல்லாஹ் நான் இவர்களின் ஜனாஸா தொழுகையை தொழ வைப்பேன்.

தமிழாக்கம்: மவ்லவி அப்துர் ரஹ்மான் தாஹிர்

REGISTERED WITH THE REGISTRAR OF THE NEWSPAPERS FOR INDIA AT NO PUNTAM/2016/68785

EDITOR
Moulvai.O.M. MUZZAMMIL AHMAD
Mobile : + 91 98885-67232
E-mail : editorbadrtamil@gmail.com
Website : www.akhbarbadrqadian.in
www.alislam.org/badr

Weekly **BADAR** Qadian
Distt. Gurdaspur (Pb.) INDIA Qadian - 143516

பதர்
வாரப் பத்திரிகை
காதியான்

MANAGER
NAWAB AHMAD
Mobile : +91 94170- 20616
E-mail : managerbadrqnd@gmail.com

Postal Reg.No. GDP-39/2020-2022 Vol. 5 Thursday 08 Oct 2020 Issue No. 41

**ANNUAL SUBSCRIPTION** : Rs.500/- (Per Issue Rs. 9/-) (**WEIGHT** - 20-50 gms/issue)

## இறைவனின் எல்லா தூதர்களின் மீதும் நம்பிக்கை கொள்பவர்தான் முஸ்லிம் ஆவார்

**ஹஸ்ரத் வாக்களிக்கப்பட்ட மஸீஹ் (அலை) அவர்களின் வாதத்தை கவனமற்று பார்க்காதீர்கள் என நான் முஸ்லிம்களுக்குக் கூற விரும்புகிறேன். அதனால் அவர்கள் இஸ்லாம் போன்ற விலை மதிக்கத்தக்க விஷயம் கையை விட்டுப் போய் விடும் அபாயம் இருக்காது**

قُوْلُوْٓا اٰمَنَّا بِاللّٰهِ وَمَآ اُنْزِلَ اِلَيْنَا وَمَآ اُنْزِلَ اِلٰٓى اِبْرٰهٖمَ وَاِسْمٰعِيْلَ وَاِسْحٰقَ وَيَعْقُوْبَ وَالْاَسْبَاطِ وَمَآ اُوْتِيَ مُوْسٰى
وَعِيْسٰى وَمَآ اُوْتِيَ النَّبِيُّوْنَ مِنْ رَّبِّهِمْ ۚ لَا نُفَرِّقُ بَيْنَ اَحَدٍ مِّنْهُمْ ۖ وَنَحْنُ لَهٗ مُسْلِمُوْنَ (2:137)

இந்த வசனத்தின் விளக்கவுரையில் ஹஸ்ரத் முஸ்லிஹ் மவ்வூது (ரலி) அவர்கள் கூறுகின்றார்கள்:

இந்த வசனத்திலிருந்து தெரியவருவதென்னவென்றால், அல்லாஹ்வின் எல்லா தூதர்கள் மீதும் ஈமான் கொண்டவரே முஸ்லிம் ஆவார். நுபுவ்வத் விஷயத்தில் அவர்களுக்குப் மத்தியில் எந்த வித்தியாசமும் காட்டக் கூடாது. எந்த நபிமார்களைப் பற்றிய ஞானம் அவருக்கு இருக்கிறதோ அவர்களின் பெயரைக் கூறி ஏற்றுக் கொள்ள வேண்டும். மேலும் எந்த நபிமார்களைப் பற்றிய ஞானம் இல்லையோ அவர்களின் மீதும் பொதுப்படையாக ஈமான் கொள்ள வேண்டும். அதாவது ஒவ்வொரு சமுதாயத்திலும் இறைவனுடைய ஏதாவதொரு நபி கண்டிப்பாக வந்திருக்கிறார் எனவும், நாங்கள் அனைவர் மீதும் ஈமான் கொள்கிறோம் என்றும், அவர்கள் எடுத்து வைத்த போதனைகளை இறைவன் புறமிருந்துள்ளவை என்றும் ஈமான் கொள்கிறோம்.

எனவே எவர் தனது காலத்தில் அல்லது அதற்கு முன்னுள்ள காலத்திலுள்ள எல்லா நபிமார்களின் நுபுவ்வத்தையும் ஏற்றுக் கொள்கிறாரோ எந்த நபியையும் மறுக்கவில்லையோ அவர் முஸ்லிம் ஆவார். ஏனென்றால் எல்லா நபிமார்களின் நுபுவ்வத்தை ஏற்ற பிறகு نَحْنُ لَهٗ مُسْلِمُوْنَ என்ற சொற்றொடரை இறைவன் கூறியிருக்கிறான். அதாவது நாங்கள் அவனுக்குக் கட்டுப்பட்டவர்களாவோம். இதிலிருந்து தெரியவருவதென்னவென்றால், இதை ஏற்றுக் கொண்ட பிறகு மனிதன் முஸ்லிமாகிறான்.

இஸ்லாம் உலகிலுள்ள எல்லா நபிமார்களின் உண்மைத்துவத்தை ஏற்றுக் கொள்கிறது. இது இஸ்லாத்திற்கே உரிய சிறப்புத்தன்மையாகும். ஒவ்வொரு மார்க்கத்தைப் பின்பற்றுபவர்களும் தத்தமது மார்க்கத்தின் நபிமார்களின் உண்மைத்துவத்தை ஒப்புக் கொள்கிறார்கள். ஆனால் அவர்கள் மற்ற சமுதாயங்களின் நபிமார்களின் உண்மைத்துவத்தை ஏற்க வைப்பதன் பக்கம் எந்த கவனமும் செலுத்துவதில்லை. இஸ்லாம் எல்லா மார்க்கங்களின் நபிமார்களுடைய உண்மைத்துவத்தை ஏற்றுக் கொள்கிறது. அவர் இஸ்ராயீலிடமிருந்து வந்தவராயினும் சரி, அல்லது ஈரானிய சமுதாயத்திடமிருந்து தோன்றினாலும் சரி. உலகின் வேறு எந்த நாட்டின் சீர்திருத்தத்திற்காக நியமிக்கப்பட்டிருந்தாலும் சரி. ஆனால் அதற்காக விவரமான ஈமான் என்று பொருளல்ல. மாறாக, மேலோட்டமான ஈமான் என்பது கருத்தாகும்.

விவரமான ஈமான் மீது நோக்கமாக இருந்தால் وَمَآ اُوْتِيَ النَّبِيُّوْنَ مِنْ رَّبِّهِمْ எனக் கூறி, எவர்களுடைய பெயர் கூட நமக்குத் தெரியாதோ, எவர்களுடைய நிலைமைகளைப் பற்றி திருக்குர்ஆனில் எங்கேயும் கூறப்படவில்லையோ அந்த நபிமார்களைப் பற்றிக் கூறியிருக்க மாட்டான். ஆயினும் பொதுப்படையாக அவர்களின் மீது ஈமான் கொள்வதை அவசியமானதாகக் கூறியிருக்கிறான்.

நான் இந்த இடத்தில் முஸ்லிம்களக்கும் கவனமூட்ட விரும்புகிறேன். எவர் எல்லா நபிமார்களின் மீதும் ஈமான் கொள்வாரோ அவரே முஸ்லிம் ஆவார் என அல்லாஹ் கூறியிருக்கும்போது ஹஸ்ரத் நபிகள் நாயகம் (ஸல்) அவர்கள் வரவிருக்கின்ற மஸீஹை நபியுல்லாஹ் (அல்லாஹ்வின் நபி) எனக் குறிப்பிட்டிருக்கிறார்கள். மேலும் இக்காலத்தில் மஸீஹிய்யத்தே மவ்வூதின் வாக்குறுதி அஹ்மதிய்யா ஜமாஅத்தின் தோற்றுனர் மூலமாக நிறைவேறி விட்டது.

எனவே இஸ்லாத்துடன் தொடர்பு கொண்டவராகக் கருதும் ஒவ்வொருவரும் எச்சரிக்கையாக இருக்க வேண்டும் என்பது அவர் மீது கடமையாகும். அன்னாரின் வாதத்தை கவனமற்றுப் பார்க்கக் கூடாது. ஏனெனில் கவனமற்றிருப்பதால் இஸ்லாம் போன்ற விலை மதிக்கத்தக்க ஒன்று கையிலிருந்து சென்று விடக் கூடிய அபாயம் இருக்கிறது. எவர் இறைவனின் எல்லா நபிமார்களின் மீதும் ஈமான் கொள்வாரோ அவரே முஸ்லிம் ஆவார். வாக்களிக்கப்பட்ட மஸீஹ் (அலை) அவர்களின் நுவுவ்வத்தும் இதற்கு விதிவிலக்கு அல்ல. எனவே முஸ்லிம்கள் எச்சரிக்கையாக இருக்க வேண்டியது அவசியமாகும்.

(தஃப்ஸீரே கபீர் தொகுதி 2 பக்கம் 210,211 – 2010 ஆம் ஆண்டு காதியானில் அச்சிடப்பட்டது)

## அநீதி இழைக்கும் அரசனுக்கு முன்பு நீதியின் கூற்றைக் கூறுவதே மிகச்சிறந்த ஜிஹாதாகும்

ஹஸ்ரத் அப்துல்லாஹ் பின் மஸ்வூது (ரலி) அவர்கள் கூறுகின்றார்கள். ஹஸ்ரத் நபிகள் நாயகம் (ஸல்) அவர்கள் கூறினார்கள்:

எனக்கு முன்பாக அல்லாஹ் எத்தனை நபிமார்களை அனுப்பியிருந்தானோ அவர்களுக்கு எத்தகைய நல்லடியார்கள் கிடைத்திருந்தனர் என்றால், அவர்கள், (அந்த நபியின்) வழிமுறைகளின்படி நடக்கக் கூடியவர்களாக இருந்தனர். மேலும் அவருக்கு கட்டுப்பட்டு நடந்தனர். பிறகு அவர்களது மரணத்திற்குப் பிறகு எப்படிப்பட்ட நபர்கள் தோன்றினார்கள் என்றால், அவர்கள் செய்யாதவற்றை கூறக்கூடியவர்களாக இருந்தனர். மேலும் அவர்களுக்குக் கட்டளையிடப்படாத விஷயங்களை அவர் பேசி வந்தனர். ஆக எவர் இவர்களுடன் தமது கைகளால் ஜிஹாத் செய்வாரோ அவர் உண்மையான நம்பிக்கையாளர் ஆவார். மேலும் எவர் இவர்களுடன் நாவினால் ஜிஹாத் செய்வாரோ அவரும் நம்பிக்கையாளர் ஆவார். மேலும் எவர் இவர்களுடன் உள்ளத்தால் ஜிஹாது செய்வாரோ அதாவது உள்ளத்தால் தீமையாக கருதுவாரோ அவரும் நம்பிக்கையாளர் அவார். (முஸ்லிம், கிதாபுல் ஈமான்)

Printed & Published by: Jameel Ahmed Nasir on behalf of Nigran Board of Badar. Name of Owner: Nigran Board of Badar. And Printed at Fazle-Umar Printing Press. Harchowal Road, Qadian, Distt. Gurdaspur-143516, Punjab. And published at office of Weekly Badar Mohallah - Ahmadiyya, Qadian, Distt. Gsp-143516, Punjab. India. Editor: Muzzammil Ahmad